★ விலை ரூபா 1·00

ஈழநாடு
THE EELANADU

மலர் 24 ஐப்பசி 16 முஹற 15 இதழ் 262
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 2—11—82

## கவச வாகனம் ஜீப்வண்டி சகிதம் துணுக்காய் காடுகளில் தேடுதல் வேட்டை

[துணுக்காய்]
சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு, மூன்று பொலிஸ் கான்ஸ்டபிள்கள் உட்பட நால்வர் கொலை செய் செய்யப்பட்டு, 33 துப்பாக்கிகளும் கொள்ளையடிக்கப்பட்டது தொடர்பாக பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து தீவிர தேடுதல் வேட்டை நடத்தி வருகின்றனர்.

இதன் எதிரொலியாகத் துணுக்காய் பகுதிக்காடுகளும் இராணுவத்தினரின் தீவிர தேடுதலுக்குட்பட்டுள்ளது.

மாங்குளம் இராணுவத்தினர் துணுக்காய்ப் பகுதியில் உள்ள ்ல்விளான், தேறுன் கண்டல். தென்னியன்குளம் காடுகளில்தேடுதல்களை நடத்தி வருகின்றனர். இராணுவ கவச வாகனங்கள், ஜீப் வண்டிகள் சகிதம் காடுகளில் இராணுவத்தினர் தேடுதல்நடத்தினர். இத்தேடுதலில் சுமார் 100 இராணுவ வீரர்கள் பங்கு கொண்டனர்

துணுக்காய்-மாங்குளம் பிரதான வீதிகளில் வந்த சகல வாகனங்களிலும் கடுமையான பரிசோதனை நடந்தது. பலர் விசாரணைக் குட்படுத்தப்பட்டனர். ஆனாலும் எவரும் கைது செய்யப்படவில்லை. இராணுவ தேடுதல் வேட்டை இரவு பகலாக இப்பகுதியிலுள்ள காடுகளில் நடைபெற்றுவருகிறது.

## தீ விபத்து

(யாழ்ப்பாணம்)
வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டதில் கோவில் கோபுரத்தைச் சுற்றி கட்டப்பட்டிருந்த ஒரு பகுதிக்

[8-ம் பக்கம் பார்க்க]

# ஹெக்டர், விஜயகுமாரதுங்க 'பாஸ்போர்ட்'டுகள் பறிமுதல்!

## சுதந்திரா இளைஞர் பேரவை அமைப்பாளர் கைது!

(கொழும்பு)
ஜனாதிபதி தேர்தல் காலத்தில், போலி அரிசிக்கூப்பன்கள வெளியிடப்பட்டது - விநியோகிக்கப்பட்டது தொடர்பாக தொடர்ச்சியாக விசாரணை நடத்திவரும் இரகசியப்பொலிஸார்; ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளர் திரு.ஹெக்டர் கொபேகடுவ மற்றும் திருமதி சிறிமாவோ மருமகன் திரு. விஜய குமாரதுங்க ஆகிய இருவரினதும் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்டு)களை பறிமுதல் செய்துள்ளதுடன்; இன்று காலை விசாரணைக்கு வருமாறும் பணித்துள்ளனர்.

போலி அரிசிக்கூப்பன்களை அச்சிட்டு விநியோகம்செய்தது தொடர்பாக இரகசியப்பொலிஸார் ஏற்கனவே திரு. ஹெக்டர் கொபேகடுவ, திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, திரு. விஜயகுமாரதுங்க உட்பட சில எதிர்க்கட்சி அரசியல் வாதிகளையும் அமைப்பாளர்களையும் விசாரணை செய்தது தெரிந்ததே.

இவ்விசாரணைகளின் ஒரு அங்கமாக; திரு. ஹெக்டர் கொபேகடுவ, திரு. விஜய குமாரதுங்க ஆகிய இருவரினதும் கடவுச்சீட்டுகளை சி. ஐ டி. பொலிஸார் நேற்று பறிமுதல் செய்தனர்.

இவர்கள் இருவரும் இன்று மீண்டும் விசாரணை செய்யப்படுவார்கள்.

[8ம் பக்கம் பார்க]

## ரயில் விபத்து தவிர்க்கப்பட்டது!

(கொழும்பு)
நேற்றுமுன்தினம் காலை கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கு வந்துகொண்டிருந்த யாழ் தேவி ரயிலில் இடம் பெறவிருந்த அபாயகரமான ரயில் விபத்தொன்றுபிரயாணி யொருவரின் சமயோசித புத்தியால் தவிர்க்கப்பட்டது.

அளவைக்கும் பொல்காவலைக்குமிடையேயுள்ள தண்டவாளத்திலிருந்து 400சிலிப்பர் கட்டைகள் கழற்றப்பட்டிருந்தமையினாலேயே இவ்விபத்து இடம்பெறவிருந்தது.

இதனால் சிறிதுநேரம் ரயில் தண்டவாளத்தில் ஒழுங்காக செல்லாமல் ரயில் பெட்டிகள் அங்கும், இங்கும் அசைந்து மோதிக்கொண்டமையால் சில பிரயாணிகள் காயமடைந்தனர்.

இவ்விபத்தை தவிர்க்கும் பொருட்டு பிரயாணியொருவர் அபாயச்சங்கிலியைப் பிடித்து இழுத்தும் ரயில் நிற்காமையால் அப்பிரயாணி ரயில் சாரதியின் பெட்டிக்குள் சென்று விபரத்தைதெரிவித்து ரயிலை நிறுத்தினர். (வெ)

## கூட்டுக் கமிஷன் இந்தியா-பாக் இணக்கம்

புதுடில்லி. நவ 1
இந்தியாவிற்கு இன்று விஜயம் செய்திருந்த பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் பிரதம மந்திரி இந்திரா காந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இப்பேசசுவார்த்தை இரு நாடுகளின் உறவுகளையும் சகஜ நிலைக்குக் கொண்டுவர வழி வகுக்குமென்று இருநாட்டுத் தலைவர்களும் நம்பிக்கைதெரிவித்தனர்.

பத்துவருடகால இடைவெளிக்குப்பின்னர் முதல் தடவையாக இந்திய பாகிஸ்தான் தலைவர்கள் பேச்சுவார்த்தை

(8-ம் பக்கம் பார்க்க)

## இன்று விசாரணைக்கு வரும் கொலை, கொள்ளை வழக்குகள்

(கொழும்பு)
வடபகுதியில் இடம்பெற்ற கொள்ளை, கொலைச்சம்பவங்கள் தொடர்பான சில வழக்குகள் இன்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. எல். ரி. மூனமலேமுன்னிலையில் விசாரணைக் கெடுக்கப்படவுள்ளன.

1977ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சாவகச்சேரி நீதிமன்றத்தை உடைத்து 11 துப்பாகிகளையும், 5 சுழல் துப்பாக்கிகளையும் கொள்ளையடித்ததாக வி நடராசா, ஸ்ரீ இந்திரன், எழிலன்ராசலிங்கம். செ செல்வரத்தினம். ச தேவபாலன் ஆகியோருக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்குஇன்று விசாரணைக் கெடுக்கப்படவுள்ளது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் குமாரை கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்ட குட்டிமணி என அழைக்கப்படும் செல்வராஜா யோகச் சந்திரனுக்கெதிரானவழக்கும்இன்று விசாரணை செய்யப்படவுள்ளது.

வந்தாறுமூலை பாடசாலை சம்பளப்பணத்தைக் கொள்ளையடித்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட கறுப்பன் என அழைக்கப்படும் ஞானவேலுக்கு எதிரான வழக்கும், அச்சுவேலிகிராமிய வங்கியைக்கொள்ளையடித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள கே. ரமணன், எஸ்,

[8-ப் பக்கம் பார்க்க]

Diploma in
COMPUTER PROGRAMMiNG
வகுப்பு ஆரம்பம் 7-11-1982
விரிவுரையாளர்: N. S. ராஜா B.Sc. (Hons) U. K.
(Former Computer Consultant,
B. C. Ltd., U K.
கம்பியூட்டர்களில் முழுமையான பயிற்சி அளிக்கப்படும்.
Training Division (Opposite of Insurance Corporation)
Digital Computer Consultants
615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5009

★ யாழ். பல்கலைக்கழகத்தில் 'ருகிங்':

## ஆறு மாணவர் இடைநிறுத்தம்!

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 'ருக்கிங்' செய்தமைக்காக ஆறு மாணவர்கள் விரிவுரைகளில் கலந்து கொள்ளாது இடை நிறுத்தம் செய்யபபட்டுள்ளனர்.

இவர்களில் மூன்று மாணவர்கள் இரண்டு தவணைகளுக்கு விரிவுரைகளில் கலந்து கொள்ளாத இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்

ஏனைய மூன்று மாணவர்களும் இரண்டு கிழமைகளுக்கு விரிவுரைகளில் கலந்துகொள்ளாது இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

இந்த 'ருக்கிங்' சம்பவத்தில் இவர்களில் சிலர் உண்மையாகத் தவறு செய்திருப்பதாகவும் ஏனைய சிலரின் பெயர்கள் அவர்களை பழிவாங்கும் நோக்கத்துடன் புகுத்தப்பட்டிருப்பதாகவும் பல்கலைக்கழக மாணவர் அவைத் தலைவரொருவர் 'ஈழநாடு'விடம் தெரிவித்தார்.

இதில் சம்பந்தப்பட்ட சில மாணவர்கள் தமது தவறை உணர்ந்துள்ளதாகவும், ஆகையால் அவர்களுக்கு மன்னிப்பு வழங்கவேண்டுமென்றும் பல்கலைக்கழகநிர்வாகத்தை மாண

8ம் பக்கம் பார்க்க]

## சரி விளம்பரம்

### தேவை

அனுபவம் வாய்ந்த பைண்டர் தேவை. நேரில் வரவும். சித்ரா அச்சகம், 310, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (5002)

மணிக்கூடு பழுது பார்ப்பதில் அனுபவம் உள்ள ஒருவர் தேவை. சாந்தி ரேடர்ஸ், டாக்டர் சுப்பிரமணியம் வீதி, (பஸ் நிலையம் அருகாமை), சுன்னாகம். (5013)

### விற்பனைக்கு

இறக்குமதியான கைஅச்சு பிரிண்டிங் புதிய மெசின்கள் பிளேட்டின், ஸ்ரொப் சிலிண்டர் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். சிவா பிறிண்டேர்ஸ், கண்டிவீதி, கைதடி. (4999)

முதல் சொந்தக்காரரின் பாவிப்பில் நல்ல நிலையில் உள்ள பஜாஜ் ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. P. M. சர்மா, "துளசி", சிவன்கோவில் வீதி சாவகச்சேரி. (5012)

### பயிற்சி

வெல்டிங் — வயறிங் — மோட்டார் மெக்கானிசம் (யாழ். நகரில் அதிக அறிமுறை செய்முறையுடன்) ஆரம்பம்; 5–11–82 J. E. C. The Jaffna Engineering College, 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், (றெயில்வே கடவைக்கு அருகில்) (5014)


# "பிள்ளைகளின் நண்பர்களை பெற்றோர் அறியவேண்டும்"

## - கல்லூரி அதிபர்

(அரியாலை)

பெற்றோர்களும் ஆசிரியர்களும் இணைந்து பிள்ளைகளின் அறிவை வளர்க்க வேண்டும். பிள்ளைகளின் சிநேகிதர்கள் யார் என்பதைப் பெற்றோர் அறிந்திருக்கவேண்டும். பெற்றோர் பிள்ளைகளின்மீது அன்பைச் செலுத்தினால் தான் அவர்கள் கீழ்ப்படிவுள்ளவர்களாகவும், சமூகத்தில் நல்ல பிரசைகளாகவும் வளர்ச்சி பெற முடியும்.

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலைப் பெற்றோர் தினவிழாவிற்குத் தலைமை வகித்த கல்லூரி அதிபர் திரு. செ. எ. ஆனந்தராஜன் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்லூரியின் பீற்றே ஞாபகார்த்தக மண்டபத்தில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் ஆரம்பபாடசாலை அதிபர் திரு; ரி துரைசாமி வரவேற்புரை நிகழ்த்தினார். கல்லூரி அதிபர் திரு. செ. எ. ஆனந்தராஜன் தொடர்ந்து பேசுகையில், "பிள்ளைகள் செய்யும் வேலைகளைப் பெற்றோர் பாராட்டவேண்டும். அதன்மூலம் பிள்ளைகள் உற்சாகமடைவர். செயல்நுட்பங்களைப் பெற்றோர் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுப்பதுடன் பிள்ளைகளிடம் சிறிய பொறுப்புக்களையும் ஒப்படைத்து அவர்கள் தாமே சுயமாகச்செயல்பட வழிசெய்ய வேண்டும். பிள்ளைகளின் படிப்புக்குப் பெற்றோர் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். அத்துடன் பிள்ளைகள் தாங்களாகவே இருந்து படிக்கத் தூண்டவேண்டும். பிள்ளைகளின் குறைநிறைகளை ஆசிரியர்களைச் சந்தித்துக் கேட்டறிந்து அவர்கள் கல்வியில் ஊக்கம்காட்டவேண்டிய பொறுப்புபெற்றோர்களுடையதாகும்.' என்றார்

ஆரம்பப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ)

# சிரமதான வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம்]

தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் பாரிய வேலைத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்டுவரும் சிரமதான வேலைத்திட்டங்களில் ஒன்றான மண்டைதீவு பூம்புகார் வீதி சிரமதான வேலைகள் இரண்டு வார காலத்தில் முடிவடையும் என்று தேசிய இளைஞர்சேவை மன்ற மண்டைதீவுக் கிளையின் தலைவர் திரு. கே சணேசன் தெரிவித்தார்.

இப்பூம்புகார் வீதிவேலைகளையும் இவ்வீதியுடன் இணைந்த அணைக்கட்டு வேலைகளையும் இளைஞர் சேவைமன்ற உறுப்பினர்கள் சிரமதான மூலம் தொடர்ந்து செய்து வருகின்றனர்

கடந்த இரண்டுமாத காலத்திற்கு மேலாக தொடர்ந்து செய்யப்பட்டுவரும் இச் சிரமதானப்பணியில் ஆண்களும், பெண்களுமாக நூற்றுக்கணக்கான தொண்டர்கள் தினமும் கலந்துகொண்டுவருகின்றனர்.

இவ்வேலை முடிவைத் தொடர்ந்து இப் பூம்புகார் வீதிக்கு அண்மையில் குளம் ஒன்றை தோண்டுவதற்கும் இளைஞர் சேவைமன்றம் ஏற்பாடுசெய்துவருகிறது. இப் புதிய குளம் அடுத்த வருடத்தில் செய்யப்படவிருக்கிறது. (வண். நிரு)

# "சுயமாகச்சிந்திக்கும் ஆற்றல் மாணவர் மத்தியில் அருகி வருகிறது"

## பரிசளிப்பு விழாவில் உயர் நீதிமன்ற நீதிபதி

(கோண்டாவில்)

'இலவசக்கல்விமூலம் கல்வி பெற்று முன்னேற்றமடைந்தவர்கள் தமது சேவையைத் தாய் நாட்டிற்கு வழங்காது சுயநல அடிப்படையில் வெளிநாடு சென்று சேவையாற்றுவது கவலையளிக்கிறது. ஒவ்வொருவரும் தனது தாய் நாட்டிற்குத் தமது அறிவையும் சேவையையும் வழங்கவேண்டும். இதன்மூலம் பொளதார ரீதியான முன்னேற்றத்தை நாம் அடைய முடியும்' என்று மட்டக்களப்பு உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் குறிப்பிட்டார்.

கொக்குவில் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் பாடசாலை மேல் மாடி மண்டபத்தில் நடைபெற்றது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உயர் நீதிமன்ற நீதிபதி திரு. கி. பாலகிட்ணர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'இளைஞர்களிடையே குற்றச்செயல்களும், பயங்கரவாத நடவடிக்கைகளும் ஏற்படக்காரணம் இளைஞர்களிடையே ஆத்மீகத்துறை வளர்ச்சியின்மையே. ஆனால் கொக்குவில் இந்துக்கல்லூரி அமைந்திருக்கின்ற சூழலைப் பொறுத்தவரையில் ஆன்மீகத்துறை வளர்ச்சியடையக்கூடியதாக இருக்கிறது.

"இப்பொழுது, மாணவர்களுக்கு முன்னோடியாக ஆசிரியர்கள் வாழ்கின்ற வாழ்க்கை மிகவும் அருகிவருகின்றது. ஆனால்எமதுகாலத்தில்வாழ்ந்த ஆசிரியர்கள், மாணவர்களின் எதிர் காலம் சிறப்புற அமைய வேண்டும் என்ற நோக்கில் தூய வாழ்க்கை வாழ்ந்தனர். இன்றைய சூழ்நிலையில் அத்தகையநிலை காணப்படவில்லை. இப்பொழுதுமழைக்கு காளான் முளைத்ததைப்போன்று, வர்த்தக ரீதியில் கல்விக்கெனத் தனியார் நிறுவனங்கள் தோன்றியுள்ளன. இவை மாணவர்களின் சிந்தனைக்கோ அன்றி முயற்சிக்கோ இடமளிக்காது, கேள்விகளுக்கு விடையாக கொடுத்து சிந்தனையற்ற ஒரு சமுதாயம் உருவாக வழிசெய்கின்றனர்.

"கடந்த வருடப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் கூறியதைப் போன்று எதிர்காலச் சந்ததி சிந்திக்கும் ஆற்றலையே இழக்கக்கூடிய மிகவும் பயங்கரமான நிலைக்கே தனியார் கல்வி நிலையங்கள் இட்டுச்செல்கின்றன. இந்த நிலை நற்பண்பு, ஒழுக்கம், நல்வாழ்வை வழங்குமா? கல்வியின் முக்கிய நோக்கம் மாணவர்களுடையே அறிவைப் பெருக்குவதும், சிந்திக்கும் ஆற்றலைத் தூண்டுவதும் ஆகும். ஆனால் இன்றைய மாணவர்களிடையே சுயமாக சிந்திக்கின்ற ஆற்றல் முற்று முழுதாக பாதிப்படைந்துவருகின்றது.

"பாடசாலையில் பெறும் கல்வியைப்பொறுத்தவரை அது அறிவைத் தூண்டுவதாகவே அமையும். ஆனால் சுயமாக சிந்திக்கும் ஆற்றலே எதிர் காலத்தில் நற்சிந்தனைகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வழிசெய்யும்.

பொருளாதாரரீதியாக இலங்கை மூன்றாம் உலக நாடுகளுடன் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கையில் இலவசக் கல்வித்திட்டத்தின் மூலம் கல்வியறிவுள்ளவர்கள் அதிகமாகக் காணப்படுகிறார்கள். ஆகையினால் இத்தகையவர்கள் சுயநலத்தைக் கருத்தில் கொண்டு தொழிற்பாடாக தாய்நாட்டிற்கும் தனது மக்களுக்கும் சேவையாற்றவேண்டும.

கல்வி கற்கமுன்னர் இருந்த வசதிகளிலும் கூடிய வசதிகளை இப்போதைய மாணவர்கள் அனுபவிக்கின்றனர். தொலைக்காட்சி சேவைமூலம்கூட கல்வி கற்கின்ற வாய்புக் கிட்டவுள்ளது. இப்பொழுது அதிபராக இருப்பவர் உறுதியான வரும் இலட்சியப்பற்றுடையவரும், தான் கற்ற பாடசாலையிலேயே சேவையாற்றவேண்டும் என்ற நோக்கில் உதவி ஆசிரியராக இங்கு வந்து படிப்படியாக பல பதவி உயர்வுகளையும் பெற்று இப்பொழுது அதிபராக இங்கு கடமையாற்றுகின்றார். இவரின் காலத்தில் பாடசாலை மேலும் வளர்ச்சியடையமுடியும். இதற்கு பழைய மாணவர்கள், பெற்றோர்கள் ஒத்துழைப்பு நல்கவேண்டும். இன்றைய விழாவின் கதாநாயகர்களாகத் திகழ்ந்து பரிசில்கள் பெறுபவர்களைப் பாராட்டுகின்றேன். அதேநேரம் மற்றவர்களும் அடுத்துவரும் வருடங்களில் பரிசில் பெறவேண்டும், யாரும் பரிசில்கள் பெறவேண்டும். யாரும் பரிசில் கிடைக்கவில்லையே என்றுமனச்சோர்வடையக்கூடாது" என்று குறிப்பிட்டார்.

அதிபர் திரு அ. பஞ்சலிங்கம் பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் திரு. சிவபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். திருமதி லக்ஷ்மி தேவி பாலகிட்ணர் பரிசில்களை வழங்கினார்.

# "கலைகள் காலத்தை வென்றவை"

[தெல்லிப்பழை]

"காலத்தை வென்று நிற்பவை கலைகள். இக் கலைகள் பண்டுதொட்டே தமிழ் மக்களிடையே போற்றப்பட்டும், மதிக்கப்பட்டும் வந்திருக்கின்றன. நவராத்திரி விழாக்கள் மூலமும் கலைவிழாக்கள் மூலமும் கலைகளின் பெருமையை நன்குணர்த்த முடியும் என்று வர்த்தலைவிளான் அ. மி. த. கலவன் பாடசாலையில் நடைபெற்ற விஜயதசமிவிழாவில் தலைமைவகித்துப்பேசிய பாடசாலை அதிபர் திரு. சி. சின்னத்தம்பி கூறினார். ஆசிரியை செல்வி ஜெயராணி அரியகுட்டி, செல்வி இராஜலச்சுமி சண்முகம் ஆகியோரும் உரையாற்றினர்,

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ)

# சிறப்பாக நடைபெற்றது

[வேலணை]

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலய ஐப்பசி வெள்ளி அலங்கார உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 27-ம் திகதி புதன்கிழமை கலைவாணி விழாவையும் பூசையையும் சிறப்பாகக் கொண்டாடியது. சங்கத்தலைவர் திரு. நா. பாலச்சந்திரன் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் 27ம் திகதி சரஸ்வதி பூசை உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. நாகராசா தலைமையில் நடைபெற்றது. [வண்-நிரு]


மீட்கப்படாத அடைவுப் பொருட்களின்

## ஏல விற்பனை

மக்கள் வங்கி சாவகச்சேரிக் கிளையிலும், மக்கள் வங்கி பளைக் கிளையிலும் 1980-ம் ஆண்டு ஆவணி மாதம் 06-ந் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு 198 -ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ந் திகதி வரை மீட்கப்படாத நகைகள் யாவும் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ந் திகதி காலை 10-00 மணியளவில் சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளைக்கட்டிடத்தில் வைத்து

பகிரங்க ஏலத்தில்

விற்பனை செய்யப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

பிரதேச முகாமையாளர்.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமைக் காரியாலயம்,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,
22-10-1982. (4948)


# அமைச்சர் தொண்டமான் ராஜினமா செய்யவில்லை

[கொழும்பு]

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவிடம், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு.எஸ்.தொண்டமான் ஏனைய அமைச்சரவை உறுப்பினர்களைப் போன்று தமது பதவிக்கான ராஜினாமாக் கடிதத்தை இதுவரை சமர்ப்பிக்கவில்லை.

இதுபற்றி திரு. தொண்டமான் தெரிவிக்கையில், 'எனது இராஜினாமாபற்றி இதுவரை எப்பேச்சும் எழவில்லை என்றும், தமதுகட்சி இ. தே. க.வுடன் சேர்ந்துள்ளதே தவிர அதன் உள்விவகாரங்களில் தலையிடுவதில்லையென்றும், ஆகையினால் தமக்கு ராஜினாமா செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும்கூறியுள்ளார்.

1978ம் ஆண்டில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட பின்னரே இ. தொ. க. அரசுடன் இணைந்ததுஎன்பது குறிப்பிடத்தக்கது.

வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத்முதலி, கல்விச்சேவைகள் அமைச்சர் லயனல் ஜயதிலக்கா ஆகியோரும் தமது ராஜினாமாக்களை இதுவரை ஜனாதிபதியிடம் கையளிக்கவில்லை, காரணம், இவர்கள் இருவரும் வெளிநாடுகளில் உள்ளனர். [கி]

# வவனியா மாவட்டத்தில் வீட்டுத் தோட்டப் போட்டி

(வவனியா)

வவனியா மாவட்ட மக்களின் உணவுத் தேவையின் ஒரு பகுதியையேனும் பூர்த்திசெய்யும் நோக்குடன் எதிர்வரும் காலபோகத்தில் வவனியா மாவட்ட இளம் விவசாயிகளுக்கும் முதிய விவசாயிகளுக்குமிடையே வீட்டுத்தோட்டப் போட்டிகளை நடாத்துவதற்கு இலங்கைவங்கியின் அனுசரணையுடன் சமத்தொழில் திணைக்களம். தேசியஇளைஞர்சேவை மன்றம், திட்ட அமுலாக்கல் அமைச்சு ஆகியவை முன்வந்துள்ளன.

இந்தப்போட்டிகள் வயது அடிப்படையில் மூன்று பிரிவாக நடத்தப்படும்.

போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களை விவசாயவிரிவாக்க

[7ம் பக்கம் பார்க]

# லெபனனில் தொடர்ந்தும் பீதி நிலவுகிறது!

## படுகொலைகள் நடக்கிறதாம்

பெய்ரூட் நவ 1

லெபனனில் மக்கள் மத்தியில் பயங்கர மோதல்களினால் ஏற்பட்ட பீதி தொடர்ந்து நிலவிவருகிறது சில இடங்களில் விஷமிகள் படுகொலைகளைச்செய்து வருகின்றனரென்ற செய்திகள் கிடைத்து வருகின்றதனாலேயே அவர்கள் மிகவும் கலக்கத்துக்குள்ளாகியுள்ளனர்.

பலர் பெய்ரூட்டிலுள்ள வைத்தியசாலைகளில் தம்மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்படலாமென்ற காரணத்தினால் தஞ்சம் புகுந்துள்ளனர். வேறும் சிலர் பாதுகாப்பான இடங்களை நாடிச்சென்றவண்ணமுள்ளனர்.

லெபனன் இராணுவம் மக்களை பீதிகொள்ளவேண்டாமென கேட்டு வருவதுடன் மீண்டும் வீடுகளில் சென்று இருக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது

நகர வீதிகளில் மக்கள் நடமாட்டம், போக்குவரத்து ஆகியன வேகமாகவும், பரபரப்புடனும் இருந்து வாகின்றன பிரதான கேந்திர நிலைகளிலும் போக்குவரத்துச்சாலைகளிலும் இராணுவ கவச, டாங்கி வண்டிகள் ரோந்து சுற்றி வருகின்றன. (கி)

# முத்தத்திற்குத் தண்டனை: ஹாக்கி ஆடத்தடை!

கராச்சி, நவ 1

ஹோட்டல்பணிப்பெண்ணை முத்தமிட்டார் என்ற காரணத்திற்காக சலீம்ஷேர்வாணி என்ற 20 வயதான பாகிஸ்தான் ஹாக்கி வீரருக்கு ஐந்து வருடங்கள் சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்ளத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அணி சர்வதேச கனிஷ்ட ஹாக்கிப் போட்டிகளில் கலந்துகொள்ள மலேஷியா சென்றிருந்தது. அங்கே இந்த அணியினர் கோலாலம்பூரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தனர். அப்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது

பாகிஸ்தான் அணியின் முகாமையாளர் இதுபற்றித் தெரிவிக்கையில், பாகிஸ்தான் ஆட்டக்காரரான சலீம் ஷேர்வாணி தங்கியிருந்த அறையைத் துப்புரவுசெய்ய பணிப்பெண்ணொருவர் அங்குசென்றதாகவும், அவ்வேளையிலேயே இவர் அப்பெண்ணை முத்தமிட்டாரென்றும் பின்னர் அப்பெண் தம்மிடம் முறையிட்டதாகவும் தெரிவித்தார். (கி)

# படிப்பை முடித்தவர்கள் அரசை நம்பியிருக்கக்கூடாது

### - நாவலர் நெடுஞ்செழியன்

சென்னை நவ 1

''படிப்பை முடித்த இளைஞர்கள் தொழில் வாய்புக்காக அரசை நம்பியிருக்கக்கூடாது. சுயமாக சிறு கைத்தொழில்களில் ஈடுபடவேண்டும்'' என்று தமிழ்நாடு நிதி அமைச்சர் கலாநிதி நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நடைபெற்ற உலக சிக்கனதின வைபவமொன்றிலேயே இவர் இதனைத்தெரிவித்தார். அமைச்சர் நெடுஞ்செழியன் மேலும் பேசுகையில் சிறுகைத்தொழில்களின் வளர்ச்சி இளைஞர்களிலேயே தங்கியுள்ளதென்றும், படிப்பை முடித்துக்கொண்டோர் அரசை நம்பியிருக்காது இக்கைத்தொழில்களில் ஈடுபடவேண்டுமென்றும் இதனால் இத்தொழில்கள் பெருமளவு வளர்ச்சி பெறுவதுடன் ஈடுபடுவோரும் பெருமளவில் லாபமடையலாமென்றார். (கி)

# ''மனிதகுலத்திற்கு சோவியத் மதிப்பளிக்க வேண்டும்''

### - அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர்

வாஷிங்டன் நவ. 1

''ஆயுதபலத்தைப் பெருக்கி இராணுவ ஆக்கிரமிப்புக்களை மேற்கொள்ளாமல் மனித நலனுக்கு மதிப்பளித்து சமாதானத்துக்காக சோவியத் அமெரிக்காவுடன் ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு அமெரிக்க வெளிநாட்டமைச்சரான ஜோர்ஜ் ஷுல்ஸ் பத்திரிகை யொன்றுக்கு அளித்த பேட்டி யொன்றில் குறிப்பிட்டார்'

திரு. ஷுல்ஸ் மேலும் கூறியதாவது: அமெரிக்க அதிபர் திரு. ரொனல்ட்ரீகன் திறமையும் துணிவும்மிக்க ஒருவராவார் இவரது தலைமையின் கீழ் அமெரிக்க உலக சமாதானத்துக்கு வழி வகுக்கின்றது.

கடந்த பத்து வருடங்களில் சோவியத் யூனியன் ஆயுத பாவனையைப் பெருக்கியதனாலேயே நாம் அந்நாட்டின் மீது கடுமையான வர்த்தகத் தடைகளை மேற்கொண்டுள்ளோம்'' என்றார். (கி)

### ✯ ஜெனரல் ஹக்கிற்கு

# திருமதி பூட்டோ சார்பில் பிரதமர்காந்தி வேண்டுகோள்

புதுடில்லி, நவ. 1

''முன்னாள். பாகிஸ்தான் அதிபரான ஜனப் சுல்பிகார் அலிபூட்டோவின் பாரியாரான திருமதி நஷ்ரத்பூட்டோவை அவர் கேட்டுக்கொண்டது போலவே வெளிநாடு சென்று சிகிச்சைபெற அனுமதிக்கவும்'' என்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி பாகிஸ்தான் ராணுவஆட்சியாளரான ஜெனரல் ஷியாவுல் ஹக்கைக் கேட்டுள்ளார்.

திருமதி இந்திரா காந்தியின் இந்த வேண்டுதல் குறித்து தீர்க்கமான பதிலெதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

திருமதி காந்தி. ஜெனரல் ஹக்கிற்கு இதுகுறித்து எழுதியுள்ள கடிதத்தில் திருமதி நஷ்ரத்பூட்டோவை அவர் விரும்பியவாறு வெளிநாடு சென்று அவரது நுரையீரலில் பிடித்திருப்பதாகச் சொல்லப்படும் புற்றுநோய்க்கு சிகிச்சை பெற அனுமதிக்கவும் என்று தெரிவித்துள்ளார். (கி)

# வீதிகள் சீர்கேடு

(மட்டுவில்)

சாவகச்சேரித் தொகுதியில் பெரும்பாலான வீதிகள் சீர்கேடான நிலையிலுள்ளன. இதனால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைகிறார்கள். குறிப்பாக டச்சுவீதி, மட்டுவில் சிவன் கோவில் வீதிகளின் நிலை மிகவும் மோசமான நிலையிலுள்ளன. (அ)

# ஜனதிபதி ஸெயில்சிங் நாடு திரும்பினர்!

### விமான நிலையத்தில் அன்பான வரவேற்பு

புதுடில்லி நவ. 1

அமெரிக்காவில் இருதய சத்திரசிகிச்சையை மேற்கொண்டு அங்கு ஒருமாத காலம் தங்கியிருந்தபின்னர் நேற்று முன்தினமிரவு இந்திய ஜனதிபதி ஸெயில்சிங் நாடு திரும்பினார்.

புதுடில்லி விமானநிலையத்தில் ஜனதிபதி ஸெயில் சிங்கை உபஜனதிபதி ஹிதாயத்துல்லா பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி ஆகியோர் உட்பட மந்திரி சபையினரும் முப்படைத்தளபதிகள் உயரதிகாரிகள் ஆகியோரும் மலர் மாலைகள் பூச்செண்டுகள் வழங்கி வரவேற்றனர் விமான நிலையத்துக்கு வெளியே பொதுமக்களும் பெருமளவில் திரண்டிருந்தனர்.

ஜனதிபதி ஸெயில்சிங் மிகவும் உற்சாகத்துடன் ஆரோக்கியமாகக் காணப்பட்டார். பத்திரிகையாளர்கள் அவரது தேகநிலைபற்றி அவரிடம் கேட்டபோது தமக்கு அமெரிக்காவில் மிகவும் நல்ல முறையில் சிகிச்சை மேற்கொண்டனர் என்றும் தாம் இப்போது சுகதேகியாக இருப்பதை உணருவதாகவும் கூறினார். (கி)

# பிரிட்டனை பழிவாங்க ஆர்ஜன்டீன முயற்சி?

### சர்வதேச கறுப்புச் சந்தையை நாடியதாம்!

லண்டன் நவ 1.

ஆர்ஜன்டீன பிரிட்டனைப் பழிவாங்கும் வகையில் சர்வதேச கறுப்புச்சந்தையூடாக பிரெஞ்சுத் தயாரிப்பு 'எக்ஸோஸெட்' ஏவுகணைகளை கொள்வனவு செய்ய எடுத்த முயற்சிகளை பிரிட்டனின் வேவுபார்க்கும் நிபுணர்கள் முறியடித்துள்ளனர் என்று 'சண்டே டைம்ஸ்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

'எக்ஸோஸெட்' ஏவுகணைகளைக் கொண்டே ஆர்ஜன்டீன போக்லாந்து யுத்தத்தில் ஒரு சில வெற்றிகளை ஈட்டியிருந்தது இந்த ஏவுகணைகளில் ஷெப்பீல்ட் என்ற பிரிட்டிஷ் நாசகாரிக் கப்பலும் அட்லான்டிக் கொன்வெயர் என்ற வேறொரு பிரிட்டிஷ் கப்பலும் ஆர்ஜன்டீனவால் மூழ்கடிக்கப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே இந்த ஏவுகணைகளை மேலும் பெற்று புதிய தாக்குதலை பிரிட்டிஷ் கடற்படைப் படகுகள்மீதுமேற்கொள்வதே ஆர்ஜன்டீனவின் நோக்கமாக இருந்ததென்றும் பிரான்ஸ் ஆர்ஜன்டீனவுக்கு விதித்த இராணுவ வர்த்தகத்தடை தொடர்ந்தும் இருப்பதால் சுமார் 10 லட்சம் ஸ்டேர்லிங் பவுண்களை ஒவ்வொரு எக்ஸோஸெட் ஏவுகணைக்கும் கறுப்புச்சந்தையில் வழங்க ஆர்ஜன்டீன முன்வந்ததென்றும் சண்டேடைம்ஸ் மேலும் தெரிவித்தது. (கி)

# பாப்பரசர் முதல் தடவையாக ஸ்பெயின் விஜயம்!

## ஸ்பெயின் நாட்டவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி

மட்றிட் நவ 1

ஸ்பெயின் நாட்டுக்கு முதல் தடவையாக பாப்பரசர் பத்து நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று முன்தினம் மட்றிட் வந்தடைந்தார்.

கத்தோலிக்க நாடான ஸ்பெயினுக்கு அம்மதத்தலைவரான பாப்பரசர் ஒருவர் விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும். பாப்பரசருடன் போலந்தின் அதிமேற்றிராணியாரும் ஸ்பெயின் வந்திருந்தார்.

ஸ்பெயினில் பலவருடங்களுக்குப் பின்னர் சோஷலிஸ்ட் கட்சி பதவிக்கு வந்த மகிழ்ச்சியில் மூழ்கியிருந்த மக்களுக்கு பாப்பரசரின் இவ்விஜயம் இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

மட்றிட் வந்தடைந்த பாப்பரசரரை ஸ்பெயின் மன்னர் யுவான் காலோஸ் மகாராணியார் சகிதமும் தற்போது பதவியிலிருக்கும் பிரதமரும் அவரது மந்திரி சபையினரும் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர். விமான நிலைய வரவேற்புகள் முடிவடைந்த பின்னர் பாப்பரசர் மோட்டார்கார்பவனியாக அழைத்து வரப்பட்டார்.

வீதிகளின் இருபுறங்களிலும் மக்கள் திரண்டிருந்தனர். பாப்பரசரை யாவரும் இலகுவாகப் பார்க்கும் வகையில் வீதியோரங்களில் அடர்ந்திருந்த மரக் கொப்புகள் வெட்டப்பட்டும், உயரமான மேடைகள் அமைக்கப்பட்டுமிருந்தன.

வர்த்தக ஸ்தாபனங்களும் பாப்பரசரின் சின்னங்கள் உட்பட அவரது உருவச்சிலைகள், படங்கள் போன்றனவற்றை பெருமளவில் விற்பனைக்காக வைத்திருந்தன. தேர்தல் முடிவடைந்து மூன்று நாட்களே கழிந்தபடியினால் பிரதான இடங்களில் போட்டியிட்ட கட்சிகளின் சுவரொட்டிகள் காணப்பட்டன. ஆனல் பாப்பரசரின் விஜயத்தினை முன்னிட்டு அவரை வரவேற்கும் சுவரொட்டிகள் உடனடியாக சகல இடங்களிலும் கவர்ச்சிகரமாக ஒட்டப்பட்டிருந்தன.

பாரபரசர் தமது இந்த ஸ்பெயின் விஜயத்தின் போது கத்தோலிக்க விவாகரத்து, மதச்சடங்குகள் ஆகியன சம்பந்தமாக தமது கருத்துக்களைத் தெரிவிப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது. (கி)

### சாவகச்சேரி

# பொலிஸ் நிலையப் பயங்கரம்: பொதுமக்கள் அனுதாபம்

[மட்டுவில்]

சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் பற்றிச் சாவகச்சேரிப் பகுதியில் பொதுமக்கள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிசாருக்கும் பொதுமக்களுக்குமிடையில் நல்லுறவு வளர்ந்துவந்த சமயத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுவிட்டதாகச் சகல கிராமமக்களும் கவலை தெரிவிக்கிறார்கள்.

இத்தருணம் மக்களின் ஒத்துழைப்பையும் நல்லுறவையும் காட்டுவதற்காகச் சிலர் பொலிஸ்நிலையத்தில் தங்கியிருக்கும் பொலிசாருக்கு சாப்பாடு அனுப்பிவருகின்றனர், ஒரு வீட்டில் மரணம் இடம்பெற்றால் சுமார் ஒரு வாரத்திற்கு அந்த வீட்டாருக்கு உணவு கொடுப்பது இப்பகுதி மரபு இந்த அடிப்படையிலேயே மக்கள் பொலிசாருக்கு உணவு வழங்கிவருகின்றனர்–

# வெளிநடப்பு மத்தியில் புதிய தலைவர் தெரிவு

(யாழ்ப்பாணம்]

புத்தூர் மேற்கு கிராமோதய சபையின் புதிய தலைவராக ஆவரங்கால் மகாஜன வித்தியாசாலை அதிபர் திரு க. பாலசிங்கம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

கிராமோதய சபையின் முதலாவது தலைவர் ராஜினமாச் செய்ததைத் தொடர்ந்து 30ம் திகதி நடந்த விசேட கூட்டத்

(6ம் – பக்கம் பார்க்க)

The Eelanaad. — ஈழநாடு — ...

### மணிவாக்கு

"மனிதனையல்ல அவனது குணங்களையே மதிக்க வேண்டும்"

— பாஸ்கல்

# நமது நோக்கு

## யாழ். நகரின் சுகாதாரம்

ஒரு நகரின் சிறப்புக்கும் அழகுக்கும் அங்கே நிறைந்துள்ள மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் எடுத்துக்காட்டாகி விடமுடியாது.

முதல் அம்சமாக அந்த நகரின் சுகாதாரம் நல்ல முறையில் பேணப்பட வேண்டும்.

அழகான கட்டிடங்களும் வீதி அமைப்புகளும் கண்களுக்கு அழகாகத் தோற்றலாம். அந்தக்கட்டிடங்களை நோக்கிச் செல்லும் பாதைகள் குப்பைகள் நிறைந்தும் சாக்கடைகள் தேங்கியும், முடை நாற்றம் சகிக்கமுடியாதுமிருக்குமானல் அந்த நகருக்குப் பெருமையில்லை. அங்கே வாழ்பவர்களுக்கும்மகிழ்ச்சியில்லை.

இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களின் தலைநகரமாகக் கருதப்படுவது நமது யாழ்ப்பாண நகரம். தமிழரின் கலைகள், கலாசாரங்கள் சமய சமாச்சாரங்கள் யாவும் இங்கு சிறப்புற வளர்வதாக நாம் பெருமைப்பட்டுக்கொள்கின்றோம். இந்தப் பெருமைகளைக்காண்பதற்காக வருகை தருபவர்கள் இங்கே உள்ள தெருவீதிகளின் வழியாகத்தான் வருகிறார்கள் – போகிறார்கள்.

கார்களில் பவனிவருபவர்களுக்கு தெருக்களின் உண்மைநிலைமை தெரியாமல் போகலாம். மக்கள் மதியில் இறங்கி அவர்களின் இன்ப துன்பங்களை நிறை குறைகளைக் கண்டும் கேட்டும்அறிபவர்களுக்கு நகரின் சுகாதார நிலைமை புரியும்.

அண்மையில் நடந்த யாழ்ப்பாண நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் சில உறுப்பினர்கள் நகரின் சுகாதார நிலைமை பற்றி காரசாரமாக எடுத்தியம்பியிருப்பது பொறுப்புள்ளவர்களின் கண்களைத் திறக்க வேண்டும்.

இது மழைக்காலம், தெருக்கள் உடைந்து குண்டும் குழியும் ஏற்பட்டு பாதைகள் பழுதடைவதும் சாக்கடைகள் நிரம்பிவழிவதும் இயற்கை. குளம் குட்டைகள் நிரம்பி புறநகர்ப் பகுதிகளில் செடிகொடிகள் வளர்ந்து நுளம்பின் தொல்லை அதிகரிக்கின்றது.

இவைகளுக்கும் மேலாக சுகாதார ஊழியர்களின் அலட்சியப்போக்கினல் குப்பைகள் குவிந்து கிடப்பதும் எடுத்துச்செல்லும் போது தெருக்கள் நெடுகிலும் சிந்தப்படுவதும் பொதுவான காட்சி. போதாக்குறைக்கு நகரில் செத்துப்போகும் நாய்கள், பூனைகள் ஏன் ஆடு மாடுகளின் உடல்கள் கூட அப்படியே கொண்டுபோய் தெரு ஓரங்களில் வீசப்பட்டிருப்பதைக் காணலாம்.

நிச்சயமாக இந்தநிலைமை நமது நகரின் பெருமையை உயர்த்தப்போவதில்லை.

நாம் அவதானித்த அளவில் கடந்த பல ஆண்டுகளாகவே நகரின் சுகாதார நிலைமை பாராட்டிக் கூறும் அளவுக்கு சீரடையவில்லையென்பது ஒரு கசப்பான உண்மை.

பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா யாழ்ப்பாணம் விஜயம் செய்தபொழுது அவர் சென்ற பாதைகள் எல்லாம் மிக சிறப்பாக துப்பரவு செய்யப்பட்டிருந்தன. காக்கைத்தீவில் குப்பை கொட்டும் பகுதியில் மேடுகள் எல்லாம் அகற்றப்பட்டு குப்பைகள் எரிக்கப்பட்டு சீராக்கப்பட்டது. இப்போது நிலைமை என்ன? அண்மையில்செத்த மாடு ஒன்று வீதியின் ஓரத்தில் போடப்பட்டு பலமணி நேரம் அப்படியே கிடந்தது. இதற்காகவே ஏராளமான கட்டாக்காலி நாய்கள் அப்பகுதியில் வசிக்கின்றன, இந்த நாய்களுக்கு வெறிபிடித்தால் என்ன நடக்கும் என்பதை யாரும் உணர்வதில்லை.

நகரின் சுகாதாரப்பணி சிறப்புறுவதற்கு இப்போதைய நடைமுறைகளை காலத்துக்கு ஏற்ற முறையில் மாற்றி அமைப்பது அவசியம். பொ  ப்பான அதிகாரிகள் நகரின் சகல பகுதிகளுக்கும் அடிக்கடி சென்று பார்வையிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்கு சமூக மனப்பாங்குள்ள அதிகாரிகளை நியமிக்கவேண்டும்.

உயர்மட்ட குழுவொன்றை நியமித்து நகரின் சுகாதாரத்தை நல்ல முறையில் பேணுவதற்கான திட்டமொன்றை வகுப்பதும் அதைச்செயல் படுத்துவதும் யாழ்ப்பாணத்தின் இன்றையமுக்கிய தேவைகளில் ஒன்று என வலியுறுத்த விரும்புகின்றோம்.

# உலகநாடுகள்

# ஒத்துழைத்தாலன்றி பட்டினி ஒழியாது

உலகில் உணவின்றி பட்டினி கிடப்பவர்கள் பற்றிய எச்சரிக்கையும் கவலையும் தரும் தகவல்கள் வெளியாகி வருகின்றன.

ஐ. நா.வின் உணவு விவசாய ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம் 50 கோடி மக்களுக்கு ஒரு கவளம் உணவு கூடக்கிடைப்பதில்லை. குறைந்தது 100 கோடி மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். ஆண்டொன்று 3 முதல் 4 கோடிவரை மக்கள் பட்டினியால் இறந்துபோகிறார்கள. லத்தீனமாக்காவில் தமது ஐந்துவயதை அடையு முன்னர் இறந்து போகும் குழந்தைகளின் பாதிப்பேரின் மரணத்துக்குக் காரணமே கலோரிச் சத்தின்மை தான்.

வளர்முக உலகின் இந்த உணவுப் பற்றுக்குறைக்குக் காரணமாகவிருப்பது எது? விவசாய நிலங்களின் குறைபாடா?

உலகின் தானிய விளைச்சலுக்கேற்ற விவசாய நிலங்களில் 60 சதவீதத்தை வளர்முக நாடுகள் கொண்டுள்ளன ஆபிரிக்காவில் டாஹெல் பிராந்தியம் கொண்டுள்ள விவசாய நிலங்கள், பிரான்ஸ் தேசம் கொண்டுள்ள விவசாய நிலங்களைக் காட்டிலும் 3 அல்லது 4 மடங்கு அதிகமானதாகும். ஆனல் இங்கு உணவு நிலைமை மிகமோசமடைந்துள்ளது.

2000 மாவது ஆண்டில் 5 ஆபிரிக்கர்களில 4 பேர் முழுப்பட்டினி நிலையில் வாழவேண்டியிருக்கும் என்று உணவு விவசாய ஸ்தாபனத்தின் டைரக்டர் ஜெனரல் எட்வேட் சௌமா தெரிவித்துள்ளார். ஆனல் பட்டினி மரணத்தின் விளிம்பில் வாழும் சாஹெல் நாடுகளின் மக்களின் பாதிப்பேருக்கான உணவுதானியங்களை பிரான்ஸ் ஏற்றுமதி செய்கிறது.

வளர்முக நாடுகளில் ஜனத்தொகை அதிகரித்துவருவது என்னவோ உண்மைதான. ஆனல் பட்டினி நிலைமைக்கு இ  தான் காரணம் என்று கூறுவதற்கில்லை.

உலகம் 1200 கோடி மக்களுக்குத் தேவையான உணவு தானியங்களை வழங்கக்கூடிய விவசாய நிலங்களைக்கொண்டுள்ளது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

வளர்முக நாடுகள் தமது விவசாய நிலங்களைப் பாழடையவிட்டதுதான் அவற்றின் இன்றைய பட்டினி நிலைமைக்குக்காரணம் என்பது பலநிபுணர்களது கருத்து.

## ஆர். குலசேகரம்

இதுசற்றுப் பொருத்தமான வாதமே. உதாரணமாக 1970—1972ம் ஆண்டுகளில் மாலி தேசத்தில் நிலவிய பெரும் பட்டினிபின்போ அந்தநாடு முன்னைய ஆறு ஆண்டுகளைக் காட்டிலும் 5 மடங்கு அதிகமான பருத்தியை உற்பத்திசெய்து ஏற்றுமதிசெய்தது. இக்காலப்பகுதியில்அதன் வேர்க்கடலை ஏற்றுமதியும் 70சதவீதத்தால் அதிகரித்தது.

தனது சுயதேவைக்கு அவசியமான பயிர்ச் செய்கையை விடுத்து முற்று முழுதாக ஏற்றுமதிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டிருப்பது மாலி தேசம் மட்டும்தான் என்று கூறுவதற்கில்லை. புதிதாக சுதந்தரமடைந்த நாடுகள் அனைத்தினதும் நிலை இதுதான்.

வளர்முக நாடுகளின் இந்த நெருக்கடி நிலையின் மூலகாரணம், கடந்தகால காலனி அடிமைத் தனையிலேயே தோன்றிவிட்டது. அப்போது ஏற்பட்ட உற்பத்தி, மறு உற்பத்தி பாவனை ஆகியவற்றுக்கிடையிலான பிணைப்புகளின் சீர்குலைவு தொடர்ந்தும் இருந்துவருவதும் இன்னொரு காரணம்.

### பொருளாதார அமைப்பு

வளர்முகநாடுகள், சுதந்திரமடைந்தபின்னரும் தொடர்ந்தும் ஒரே மூலப்பொருளை ஏற்றுமதிசெயயும்நிலையிலேயே பெரிதும் தங்கியிருக்கும்வகையில் உலகப்பொருளாதார அமைப்பு இருந்துவருகிறது. அத்துடன் வளர்முகநாடுகளின் சீர்கெட்ட பட்டினிநிலைக்கு இன்னொரு காரணியாக, ஏற்றுமதிப் பயிர்செய்கையானது அந்த நாடுகளுக்குத் தேவையான உணவுப்பொருள் உற்பத்தியை விலக்கிவைதது விட்டதை கூறலாம்.

இவற்றின் விளைவாக ஏறத்தாழ50 ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளால் தமதுஉணவில் சுயதேவைப்பூர்த்தியில் 50-60சதவீதம் வரைதான் எட்டமுடிந்துள்ளது.

உணவுப் பொருளை இறக்குமதிசெய்வது என்பது தற்காலிகமாக பட்டினி நிலைமையை ஒத்திப்போட வகைசெய்யலாம் ஆனல் இது வளர்முக நாடுகளைச் சுற்றி ஒரு விஷ வட்டத்தை உருவாக்கிவிடுகிறது இந்நாடுகள் உணவுப் பொருட்களை இறக்குமதிசெய்வதானது, அந்த நாடுகள் ஏற்றுமதிசெய்யும் ஒரே பயிர்ச்செய்கையின் உற்பத்தியை அதிகரிக்கவே செய்யும். இந்த நிலைமை உணவில் சுயதேவையைப் பூர்த்திசெய்யும் அடிப்படைகளைச் சீர்குலைப்பதுடன், இறக்குமதி உணவிலேயே பெரிதும் தங்கியிருக்கும் நிலைமென்மேலும் அதிகரிக்கிறது.

### உணவே ஆயுதம்

இதையே உணவு ஆயுதம் ஏற்றுமதி செய்யும் மிகப்பிரதானமான நாடுகள் விரும்புகின்றன. உதாரணமாக, உலக உணவுச்சந்தையில் மேன்நிலையைச் சொண்டிருக்கும் அமெரிக்காவை எடுத்துக்கொள்வோம்.

உலக சமாதானத்தைப் பேணுவதற்கு அமெரிக்காவின் மிகச்சக்திவாய்ந்த ஆயுதம் உணவேதான் என்பதை அமெரிக்க விவசாயத்துறை அமைச்சர் ஜோன் ப்ளெக் கூறியுள்ளார். அடுத்த 20 ஆண்டுகளுக்கு அமெரிக்கா ஏராளமான உணவுத்தானியங்க... மதிசெய்யும் என்று... தெரித்துள்ளார்.

உலக உண... வளர்ச்சிபெற்ற ெ... ளின் கையே ஓங்... இன்னொரு துக்ககர... ஏனெனில் உணவு... இந்நாடுகள் தமது... நிர்ணயிக்கும் பொ... முக நாடுகளின்வறு... பட்டினி நிலையை... தில் கொள்ளாது... லாபத்தைப் பெறு... கண்ணுங்கருத்துமா... கும்.

அடுத்தது வளர்மு... ளின் கஷ்டமான... பயன்படுத்தி... தமது அரசியல் செ... குள் இழுக்கவும் இ... வதில்லை. வளர்மு... தமது பட்டினிநி... மீளுவதற்குவேண்டி... களை இந்நாடுகள்... தான் இதுவன... அ... துள்ளன.

உலகின் சகல... ஒத்துழைக்காத... ழ்ந்தப்பட்டினி நிலை... லிருந்துஅகற்றமுடி...

# இறந்தவ... இ...

இன்று கிறி... யங்களில் இ... ந...

## பேகம் நஸ்ரத் பூட்டோ

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் கொலை செய்யப்பட்ட ஜனப் சுல்பிகார் அலி பூட்டோவின் குடும்பம் சர்வாதிகாரி சியாஹுல் ஹக்கின் கெடுபிடிகளினல் தொடர்ந்தும் இம்சைகளுக்குள்ளாகி வருகின்றது.

சியாஹுல் ஹக்கைப் போன்று அல்லாமல் பூட்டோ மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவராக விளங்கினர். ராணுவ ஆட்சியினல் கொலையுண்டதின் காரணமாக அவரது குடும்பத்திற்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகரித்தது. இந்தச்செல்வாக்கு அதிபர் ஷியாஹுல் ஹக்கின் ஆட்சிக்கு தலையிடியாகவுள்ளதினல் சுகவீனமுற்றிருக்கும் பேகம் நஸ்ரத்து பூட்டோவையும்கூட சிறையில் அடைத்து கொடுமைப் படுத்திவருகிறார்.

மக்களால் நேசிக்கப்பட்ட ஒருதலைவனின் மனைவி சுகவீனம் காரணமாக விடுதலை பெற்று சிகிச்சை பெறுவதற்கும்கூட உரிமை வழங்கப்படவில்லையெனில் ராணுவ ஆட்சியின் கொடுமையின் கோரத்தனத்தைப் புரிந்து கொள்ளலாம்.

அந்த அம்மையார் சுவாசப்பைக் கோளாறினல் அவதிப்படுகிறார். அவரை வெளிநாட்டில் சென்று சிகிச்சை பெறுவதற்கு அனுமதியுங்கள் என்று அண்டை நாடான இந்தியாவின் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அதிபர் ஸியாஹுல் ஹக்கை கேட்டிருக்கிறார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்த வேளையில் தமது உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடுவதாகக் கூறுவதை விடுத்து ஒரு பெண்ணுக்காக இன்னொருபெண் விடுக்கும் கோரிக்கை என்ற முறையிலாகுதல் இந்திராவின் கோரிக்கைக்கு அதிபர் ஸியாஹுல்ஹக்செவிசாய்ப்பாராகில் இருநாடுகளுக்குமிடையில் நல்லெண்ணம் மேலும் வளரஉதவும். உள்நாட்டில் அவர்மதிப்பும் உயரும்.



# தவர் இறைமுகம்காண இன்று வழிபாடு

— பற்றிமாகரன் —

கிறிஸ்தவ ஆல
ந்தவர்கள்

நாடுகளுக்கு
ியங்களை ஏற்று
என்றும் அவர்
ார்.

சந் தயில்
ற பெரிய நடுக
ஓங்கியிருப்பது
க்ககரமான நிலை.
வு சந்தையில்
தமது விலைகளை
பொழுது வளர்
ன்வறுமைப்பட்ட
லயைக் கவனத்
ாது தமது நிகர
பெறுவதிலேயே
த்துமாக இருக்

வளர்முக நாடுக
ான நிலைகளைப்
அவற்றைத்
ல் செல்வாக்கிற்
வும் இவை தவறு
ளர்முக நாடுகள்
னிநிலையிலிருந்து
வேண்டிய உதவி
கள் வாயளவில்
அளித்து வந்

கல நாடுகளும்
த பட்சத்தில்
னி நிலையை உலகி
றமுடியாது.

பேரின்பம் பெறுவதற்காகப் பிரார்த்தனைகள் செய்யப்படுவது வழமை. கிறிஸ்தவ சமய நம்பிக்கையின்படி ஒவ்வொருவனும் செய்யும் செயல்களின் பேறுபலன்களுக்கேற்ப மனிதர்களுடைய வாழ்வு மரணத்தினால் மாறுபடுகிறது. மரணத்தினால் வாழ்வு மாறுபடுகிறதேயன்றி அழிக்கப்படுவல்லை. எனவே மறு உலகில் இறை இன்பத்தை துய்க்க முடியாமல் தவிக்கும் ஆன்மாக்களின் குற்றங்குறைகளை மன்னித்து அவர்களை புனிதர்கள் திருக்கூட்டத்துள் ஏற்றருள வேண்டுமென்று அந்த ஆன்மாக்களுக்காக இறைவனின் பெருங்கருணையை இறைஞ்சுவதே இன்றைய தினத்தின் இலட்சியமாகும். இறைவன் சினங்கொள்ளத் தயங்குகின்ற தேவனாக இருப்பதால் அவனை புகழ்ந்து பாடிப்பரவி அறியாமையால் வாழ்விழந்துவிட்ட ஆன்மாக்களுக்காக இறைவனின் மன்னிப்பை வேண்டும் திருநாளே ''இறந்த ஆன்மாக்கள் திருநாள்.

இது ஒரு வகையில் ஒவ்வொரு உயிருள்ள மனிதனது கடமையுமாகும். ஏனெனில் எங்கள் உற்றோர் பெற்றோர் அன்பர்கள் நண்பர்கள் பலர் இறந்துள்ளார்கள். அவர்களால் இவ்வுலகில் மகிழ்வுற்ற நாம் அவர்கள் மறுவுலகில் இறை இன்பம் பெற்றிட அவர்களுக்காக மன்றாடவேண்டிய கடமையுடையவர்களாக நன்றியுடையவர்களாக இருக்கிறோம். மனிதர்கள் அனைவரும் எங்கள் சகோதரர் என்ற விழுமிய கோட்பாட்டுக்கமைய நாம் எந்த எந்த மனித ஆன்மா இறை தரிசனத்துக்கா ஏங்குகிறதோ அந்தந்த ஆன்மாக்களுக்காக எல்லாம் பிரார்த்தனை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம்.

## 'மாணவர் குறையை நீக்குக'

[வேலணை]

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையை அரசாங்கம் பொறுப்பேற்று 20 வருடங்களுக்கு மேலாகியிருப்பதும் இப்பாடசாலைக்கெனப் புதிய கட்டிடம் அமைப்பதற்கு அரசு இதுவரை நிதி எதுவும் வழங்கவில்லை. இதனால் மேவதிக வகுப்புகளைப் பாடசாலை வளவுக்கு அருகாமையிலிருக்கும் மரநிழலிலேயே நடத்த வேண்டியுள்ளதாம். இக்குறையை நிவர்த்தி செய்து உதவுமாறு பாடசாலை அதிபர் திரு. நாகலிங்கம் கனகசபாபதி வேலணை கிழக்கு கிராமோதய சபையின் மாதாந்தக் கூட்டத்தில் பிரேரணை ஒன்றினைச் சமர்ப்பித்திருக்கின்றார். [அ]

## வரப்பெற்றோம்

நூல்: அபிராமி அந்தாதி ஆய்வுரை. வெளியீடு: வழக்கம்பரை சனசமூக நிலையம். விலை: 2 ரூபா.

அபிராமி அந்தாதி 3ம் பாடலான 'அறிந்தேன் எவரும் அறியா மறையை' என்ற பாடலுக்கு புலவர் சந்தானராமன் எழுதிய ஆய்வுரையே இந்நூலாகும் 11 பக்கங்களைக் கொண்ட இந்நூலில் அம்பிகையின் பெருமையையும் அம்பிகை அடியார்கள் பெருமையும் நன்கு விளக்கப்பட்டுள்ளது.

அம்பாளை வணங்குபவர்கட்கு அம்பாளின் உதவி வெளிப்படையாகவே கிடைக்கும் என்பதற்கும் அம்பாள் வழிபாட்டால் பல அரிய உண்மைகளை, இரகசிய செய்திகளை சுலபமாக அறியலாம் என்பதற்கும் சிறந்த உதாரணங்களாக சில உண்மை நிகழ்ச்சிகள் இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

நம் சைவ, வைணவ கிறீஸ்தவ, இஸ்லாமிய சமயக் கருத்துக்களை பழகி இருப்பது போன்று சாக்தமதக் கருத்துக்களையும் பழகத்தக்கதாக புலவர் சந்தானராமன் அவர்கள் ஏற்ற இடங்களில் பக்குவமான துறையில் சாக்தக் கருத்துக்கள் இடம்பெறச் செய்துள்ளார்.

இப்பாடலைப் பாராயணம் செய்வதால் தெளிவான அறிவு, நல்லோர் நட்பு, பகை நீக்கம் ஏற்படும் என்ற கருத்துக்குபொருத்தமாக அமைந்த உரையைப்படித்துப் பாட்டின் பொருளுணர்ந்து பாராயணம் செய்ய இந்நூல் பேருபகாரம் செய்யும். [ப]

## புதிய சப்பறம்

(யாழ்ப்பாணம்)

வேலணைபெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்திற்கு புதிய சம்பற அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன,

லட்சக்கணக்கான ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் இந்தப்புதிய சப்பறத்தை செய்வதற்கு சப்பற அமைப்புக்குழுவொன்று தெரிவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான கூட்டம் ஒன்று இம்மாத முற்பகுதியில் நடைபெறவிருக்கிறது தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. சி. நாகராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் சப்பற அமைப்புகள் பற்றியும், நிதி தொடர்புகள் பற்றியும் ஆராயப்படுவதுடன் இதற்கான நிர்வாக்குழுவொன்றும் தெரிவுசெய்யப்படும். (வண்-நிரு.)

## புதிய பஸ்

[யாழ்ப்பாணம்]

781ம் இலக்க மண்டைதீவு பஸ் சேவைக்கு 'சி' இன புதிய பஸ்வண்டி ஒன்றைக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் செயலாற்று முகாமையாளர் திரு, க. மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

மண்டைதீவுக் கிராமோதய சபைத்தலைவருக்குஎழுதியுள்ள கடிதம் ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## வேலணையில் மீண்டும் அரிசி விற்பனை நிலையம்

(வேலணை)

கடந்த வாரம் வேலணையில் மீண்டும் திறக்கப்பட்ட அரிசி விற்பனை நிலையம் பெருமளவில் சேவையாற்றி வருகிறது. நாளாந்தம் பெருந்தொகையான அரிசி இங்கு விற்பனையாகிறது

நெல் சந்தைப்படுத்தும் சபையினரால் வேலணை வங்களாவாடியில் ஏற்கனவே திறந்துவைக்கப்பட்ட இந்தச் சில்லறை அரிசி விற்பனவு நிலையம் பலகாலமாகப் பூட்டப்பட்ட நிலையில் இருந்துவந்தது இதன் பின் பொது மக்களின் புகாரையடுத்து இது மீண்டும் திறக்கப்பட்டது. (அ)




# உங்களை யாரென்று எவருக்கும் தெரியாது- பெயரைக்கூட

பயன்படுத்தாமல் வைத்திருக்கும் பணத்திற்கு இலங்கை வங்கியின் • வைப்புச் சான்றிதழ்களை வாங்கி நல்ல வட்டியைச் சம்பாதியுங்கள்.

ஒவ்வொன்றும் ரூ. 1,00,000/- பெறுமதியான இவற்றை 6 மாதங்களில் பணமாக்கலாம். கொள்வனவு விலையை பேசித்தீர்க்கலாம்.




- உங்கள் பெயர் உட்பட எவரும் எதுவும் கேட்கமாட்டார்கள்.
- பணத்தைப் பெறும்போது அடையாளம், கையொப்பம் எதுவும் தேவையில்லை.
- சான்றிதழ்களை எவருக்கும் கைமாற்றலாம்.
- எந்தக் கொடுக்கல் வாங்கலுக்கும் பணம்போலப் பயன்படுத்தலாம்.

உங்கள் வைப்புச் சான்றிதழை தாமதியாது பின்வரும் ஏதாவதொரு கிளையில் பெற்றுக்கொள்ளுங்கள்.

| | |
|---|---|
| மெற்றோபொலிற்றன் கிளை (யோர்க் வீதி) | கண்டிக்கிளை |
| மாநகர அலுவலகம் | கண்டி இரண்டாவது நகரக் கிளை |
| புறக்கோட்டை கிளை | கேகாலை பிரதான கிளை |
| காலி பிரதான கிளை | மாத்தறைக் கிளை |
| யாழ்ப்பாணம் பிரதான கிளை | மாத்தறை இரண்டாவது கிளை |

இலங்கை வங்கி

# "பிறஊரவர் மீன் பிடிப்பதை இங்குதடை செய்யவேண்டும்"

## யாழ். அபிவிருத்தி சபைக்கு தனங்கிளப்பு கி. உ. சபை கோரிக்கை

(மட்டுவில்)

'தனங்கிளப்பு — மறவன்புலவுப் பகுதியில் கடற்கரைக்கும் நடுக்கடலுக்குமிடையில், கரைப்பக்கமாக இருநூறு யார் தூரத்திற்கு இயந்திரப் படகு மீன்பிடியாளர் வந்து மீன்பிடிப்பதை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை தடைவிதிக்கவேண்டும். எமது பிரிவு எம். பி. மூலமே, இத் தீர்மானம் யாழ். மாவட்ட சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.'

இவ்வாறு கோரும் பிரேரணையை தனங்கிளப்பு கிராமோதய சபையில், இப்பகுதி ஏழை மீனவர்களின் நலன் கருதி சபைத் தலைவர் திரு. பொ. நவசிவாயம் கொண்டு வந்தார். அவர் தொடர்ந்து தனது பிரேரணையின் மீது பேசுகையில் குறிப்பிட்டதாவது:— 'மறவன்புலவு, தனங்கிளப்பு ஆகிய இடங்களிலும் இதைச் சுற்றியுள்ள கைதடி, நாவற்குழிப்பகுதிகளிலுமுள்ள ஏழை மீனவர்கள், கடலில் இடுப்பிற்கு மேற்பட்ட நீரில் கரைவலை மூலம் இறால் பிடிப்பதன் மூலமே தமது தினசரி ஜீவியத்தைக் கழிக்கிறார்கள். பண்ணை, யூரி, கொழும்புத்துறை, ஆனைக்கோட்டை போன்ற பகுதிகளிலுள்ள இயந்திரப் படகு மீன்பிடியாளர்கள் மீன் பிடிப்பதற்காக இப்பகுதிக் கரைக்கு வருவதனால் ஏழை மீனவர் கட்டிய கண்டிவலை சிதைவுறுகிறது. இதனால் அவர்களின் தொழில் பாதிப்படைகின்றது' என்றார்.

பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது.

### கடன் நிலுவை வசூலாகிறது

(மட்டுவில்)

இதுவரை தென்மராட்சி, தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் வழங்கப்பட்ட விவசாயக்கடனில் நீண்ட காலமாக விவசாயிகளினால் திருப்பி இறுக்கப்படாது நிலுவையில் இருந்த விவசாயக்கடன்களிலிருந்து சுமார் 75,000 ரூபா நீதிமன்றம் மூலம் வசூல் செய்யப்பட்டது.

இதுவரை 400 பேர் மீது விவசாயக்கடனுக்கான வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன. தொடர்ந்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வழக்குகளின் மூலம் சுமார் 200 விவசாயிகள் தமது விவசாயக்கடனை செலுத்தி முடித்துவிட்டார்கள் எனவும் இதுவரை சுமார் 75000 ரூபா வரை வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் புதிய கடன் வசூலிப்பாளர் திரு. இ. சிவானந்தம் தெரிவித்தார். (அ)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் கொழும்பு அரசாங்க செயலகத்தில் இழுக்கப்பட்ட மகாஜன சம்பத்த சுவீப் முடிவுகள் வருமாறு:

1-ம் பரிசு
02 X 0863
ரூபா 2,03,210

2-ம் பரிசு
16 F 0528
ரூபா 1,21,926

3-ம் பரிசு
20 A 0420
ரூபா 40,642

தலா ரூபா 870 சதம் 90 கொண்ட ஆறுதல்பரிசுபெறும் நூறு டிக்கட்டுகள் வருமாறு:

16 A 0689 — 20 A 0582
21 A 0682
07 B 0659 — 09 B 0622
16 B 0274 — 19 B 0379
20 B 0571
01 C 0874 — 05 C 0579
01 D 0212 — 10 D 0226
18 D 0190 — 21 D 0113
06 E 0033 — 18 E 0694
23 E 0996
05 F 0801 — 08 F 0976
12 F 0731 — 14 F 0480
18 F 0718 — 23 F 0298
04 G 0647 — 09 G 0090
09 G 0686 — 09 G 0840
10 G 0950 — 15 G 0709
20 G 0625
06 H 0904 — 07 H 0212
09 H 0154 — 12 H 0207
18 H 0725
02 J 0573 — 16 J 0023
16 J 0980
07 K 0053 — 09 K 0464
14 K 0[illegible]41 — 23 K 00[illegible]6
23 K 0700
02 L 0721 — 06 L 0386
16 L 0017 — 23 L 0012
12 M 0751 — 18 M 0539
10 N 0269 — 10 N 0301
18 N 0899 — 25 N 0238
13 O 0793 — 05 O 0158
07 O 0159 — 09 O 0257
19 O 0187 — 23 O 0675
06 P 0341 — 09 P 0448
09 P 0845 — 14 P 0966
19 P [illegible]551
10 Q 0257
02 R 0880 — 13 R 0387
18 R 0090 — 20 R 0909
22 R 0206
02 S 0165 — 05 S 0138
06 S 0864 — 07 S 0123
18 S 0[illegible]20 — 20 S 08[illegible]9
14 T 0449 — 06 T 0669
09 T 0217 — 11 T [illegible]085
06 U 0277 — 09 U 0545
09 U 0557 — 09 U 0998
05 V 0535 — 10 V 0727
19 V 0740 — 22 V 0295
04 W 0200 — 04 W 0729
14 W 0284 — 24 W 0796
11 X 0521 — 07 Y 0029
08 Y 0698 — 12 Y 0448
03 Z 0295 — 19 Z 0755
20 Z 0062 — 20 Z 0836

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

## க.பொ.த.(சாதாரண)பரீட்சை ஒத்திவைக்கப்படுமா?

(கொழும்பு)

''பாராளுமன்ற பதவிக் கால நீடிப்புக்கான சர்வசன வாக்கெடுப்பு டிசம்பர் மாதத்தில் நடைபெற இருப்பதால் இம்மாதம் 13ம் திகதி முதல் 21ம் திகதிவரை நடைபெற விருக்கும் க. பொ. த. சாதாரண பரீட்சை ஒத்திவைக்கப்படலாமென்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர் வரும் டிசம்பர் 17ம் திகதி வரையிலேயே சர்வசன வாக்கெடுப்பு நடைபெறவிருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. ஆகையினால் க. பொ. த. சாதாரண பரீட்சையும் இதன்பொருட்டு ஒத்திவைக்கப்படலாமென்று தெரிவிக்கப்பட்டது.

கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் இதுபற்றித் தெரிவிக்கையில், டிசம்பர் மாதம் க. பொ. த. பரீட்சைக்கான நேர அட்டவணை, அனுமதிப் பத்திரம் ஆகியன தயாரிக்கப்பட்டு விட்டனவென்றும், ஆனால் இவை அனுப்பிவைக்கப்படவில்லையென்றும், சர்வசன வாக்கெடுப்பு டிசம்பரில் நடைபெறும்பட்சத்தில் இப்பரீட்சை நத்தார் தினத்துக்குப்பின்னரே நடத்தப்படும் என்றும் கூறினார்.

பரீட்சை பின்போடப்படுவதற்கான பிரதான காரணம், பரீட்சை நிலையங்கள் பல வாக்களிப்பு நிலையங்களாக மாற்றப்படவுள்ளமையே என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## வடபிராந்திய குடும்பநல மாநாடு

(மன்னார்)

இலங்கை குடும்பநல சங்கத்தின் வடபிராந்திய மகாநாடு இம்மாதம் 28ஆம் திகதி வவுனியாவில் நடைபெறவுள்ளது. தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெறும் இம்மகாநாட்டில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வார்.

இம்மகாநாட்டில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தொண்டர்கள் கலந்துகொள்வார்கள்.

இம்மகாநாட்டில் மன்னார் மாவட்ட குடும்பநல சங்கத் தலைவர் டொக்டர் ரொபேர்ட் குரூஸ் தலைமையில் 400 தொண்டர்கள் கலந்துகொள்வார்கள்.

இம்மகாநாட்டில் இலங்கை குடும்பநலச் சங்கத்தின் வடபிராந்திய கிளைகளினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் பற்றிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். (மா)

## கிறிஸ்தவ மாநாடு

[அரியாலை]

இலங்கைப் பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர்களின் வருடாந்த மாநாடு கண்டியைவை. எம். சி. ஏ. மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

பல்கலைக்கழகங்களிலுள்ள கிறிஸ்தவ இளைஞர்களின் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் மாநாடு ஒருவாரம் வரை நடைபெறவிருக்கிறது.

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 16-ம் திகதி செவ்வாய்க்கிழமை (2—11—82)

மேடம்— இன்னலின் பின்னலால் இதயப் பாரம் ஏற்படும். அற்ப விடயத்துக்கூட குறைகேட்க நேரிடும். நாவடக்கம் விரும்பத்தக்கது.

இடபம்: முத்தான சந்திப்பு ஒன்று கிடைக்கும். முதியவரின் ஆதரவும் பெருகும். கற்றதனால் பயனும் உண்டாம். இன்று பொன்னான நாள்.

மிதுனம்: ஆசைவார்த்தைகளால் அவப்பெயருக்கும் இடமுண்டு. குருக்கு வளியில் இறங்க வேண்டாம், சிறியவிடயத்துக்குக்கூட பெரிய கோபம் தோன்றக்கூடும்.

கடகம்: பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக் கொடுப்பார்கள். கல்வித் துறையில் அதிக ஈடுபாடும் ஏற்படுத்தும்.

சிங்கம்: உறவுமுறைகள் பலப்படும். உற்சாகமும் பெருகும். புதிய நண்பர்கள் புடைசூழ்வார்கள். பணவிவகாரத்தில் மகிழ்ச்சியை அளிக்கும்.

கன்னி: ஏமாற்றத்தின் எதிரொலி பலிக்கும் உணர்ச்சிவைத் தூண்டும். எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும். வேண்டப்படாத உறவு முறைகளைத் தவிர்த்துக்கொள்ளவும்.

துலாம்: காதல் விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவங்கள் இடம் பெறும். களஸ்திரவளியால் பொருள் வரவுக்கும் இடமுண்டு. பெரியோர் ஆதரவு கிடைக்கும்.

விருட்சிகம்: வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும். மனத்தை ஒருமைப்படுத்திச் செயலாற்றவும். சுமாரான தினம்.

தனு! அன்புக் கரங்கள் அணைக்கும் தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வளிகாட்டியாக அமையும்.

மகரம்: முயற்சியால் உயர்ச்சி உண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் முன்னேற்றம் தென்படும். தொழில்துறையில் நல்ல மாற்றங்கள் பெருகும்.

கும்பம்: சகோதர பாசம் தலைதூக்கும். தொழில்துறையில் விருத்திக்கும் இடமுண்டு. பெரியோர்களின் ஆதரவும் பெருகும். பொன்னான தினம்.

மீனம்: குறுக்கு விசாரணையில் இறங்குவதால் சட்டத்தின் பிடியிலிருந்து மாட்டிக்கொள்ள நேரிடும். திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## வலுவிழந்தோர் சிகிச்சை நிதி

(கிளிநொச்சி)

பரந்தன் கிளிநொச்சி றோட்டறிக்கழகத்தின் ஜனநிதிபதி தேர்தலை முன்னிட்டு நடத்திய போட்டியில் முதற்பரிசான ஆயிரம் ரூபாவை எஸ். ராஜேஸ்வரியும் இரண்டாம் பரிசான ஐநூறு ரூபாவை எம். சவரிமுத்துவும், மூன்றாம் பரிசான இருநூற்றைம்பது ரூபாவை என். மகேஸ்வரனும் பெற்றனர்.

இப்போட்டி மூலம் கிடைக்கப்பட்டபணத்தை வலுவிழந்தோர் சிகிச்சை நிதிக்காக பயன்படுத்த றோட்டறிக்கழகம் முன்வந்துள்ளதாக கிளிநொச்சி பரந்தன் றோட்டறிக்கழக செயலாளர் டாக்டர் த. சிற்றரன் தெரிவித்தார். (க)

### வெளிநடப்பு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் திரு. க. பாலசிங்கம் இச் சபையின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

விசேட சேவை அலுவலர் திரு. க. நாகேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த விசேட பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் பதினொரு உறுப்பினர்கள் தலைவர் தெரிவின்போது வெளியேறினர். பதின்மூன்று உறுப்பினர்கள் சமூகமாயிருந்து புதிய தலைவரைத் தெரிவுசெய்தனர்.

இச்சபையின் முதல் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட ஆசிரியர் திரு. வே. இளையகுட்டி அங்கத்தவர்களது ஒத்துழைப்பு இல்லாத காரணத் திலுைராஜினாமாச்செய்திருந்ததும், இதைத்தொடர்ந்து 3 மாத காலமாக இச்சபை இயங்காதிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (வண்-நிரு)



(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் தேவஸ்தான முகாமையாளரும் அகில இலங்கைத் தமிழ்ப்பேசும் உபதபால் அதிபர்கள் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் தலைவரும், மண்டைதீவு தமிழிசைச் சங்கத்தின் உபதலைவருமான அல்லைப்பிட்டி உபதபால் அதிபர் திரு. சிதம்பரநாதர் இரத்தினசபாபதி ஊர்காவற்றுறை நீதிபரிபாலன மாவட்ட சமாதான நீதவானாக நீதி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சிறந்த சமூக சேவையாளரான திரு. இரத்தினசபாபதி, அல்லைப்பிட்டிப் பகுதி மரணவிசாரணை அதிகாரியாகவும், வெலியாத்து உத்தியோகத்தராகவும், அல்லைப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும், அல்லைப்பிட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராகவும் பணியாற்றிய வர். (வண். நிரு.)

### பரிசு பெற்ற 3 வண்டிகள்

(கிளிநொச்சி)

ஸ்கந்தபுரம் இளைஞர் விவசாய கழகத்தினரால் கழகத் தலைவர் திரு எஸ். ஜெகதீஸ்வரன் தலைமையில் நடாத்தப்பட்ட மாட்டுவண்டி அலங்காரபவனியில் திரு. இ. குணரத்தினம். திரு. ஜெயரூபன், திரு. செல்லத்துரை ஆகியோர் முறையே மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டனர். (க)

# "விழாக்களுக்கு ஆகும் பணத்தை மக்கள் வாழ்வுக்குச் செலவிடுவீர்" - வண பிதா சிங்கராயர்

(யாழ்ப்பாணம்)

''வயோதிபர்கள் சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல அவர்களும் சமுதாயத்திற்குத் தேவையானவர்கள் என்பதை உணர்த்துவதற்காக பெரியவிளான் கிறீஸ்தவ வாலிபர் ஒன்றியம் ஒரு தினத்தை முதியோர் இல்லத்தில் செலவு செய்ததை நிச்சயமாகப்பாராட்டியே ஆகவேண்டும் முதியோருக்கு வாழ்வு கொடுக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு கொடித்தினம் நடத்திப் பணம் சேகரித்தார்கள். இப்படிப்பட்ட இளைஞர்தான் இன்றைய சமுதாயத்தின் முத்துக்கள் இவர்கள் செயல் பற்ற இளைஞர்களுக்கு முன் மா திரியாயிருக்கவேண்டும். இந்தநிகழ்ச்சி இன்றுமட்டுமன்றி ஒவ்வொரு ஆண்டும் நடைபெறவேண்டும் இன்றைய தமிழ்ச்சமுதாயத்திற்கு விழாக்கள் வேண்டாம். ஆடம்பரச்செலவுகள் வேண்டும். விழாக்காலத்தில் விரயமாகும் பணத்தை மக்களின் நல்வாழ்வுக்காகச் செலவுசெய்யப்பழ வேண்டும்.'

மேற்கண்டவாறு கொழும்புத்துறை முதியோர் இல்லத்தில் நடம்பெற்ற சிரமதான வைபவத்தில் அருட்திரு சிங்கராயர் அடிகள் பேசுகையில் கூறினர்.

மேற்படி ஒன்றியத்தால் முதியோருக்கு மதிய உணவு வழங்கப்பட்டது. அன்றைய தினத்தில் சிரமதானம்செய்து முதியோர் இல்லத்தை இளைஞர்கள் துப்புரவு செய்தார்கள். மாலை கலைநிகழ்ச்சிகள் மூலம் வயோதிபருக்கு மகிழ்ச்சியூட்டினர்கள். பணமுடிப்பும் கொடுக்கப்பட்டது யாழ் மறைமாவட்டக்குரு முதல்வர் அருட்திரு எஸ் ஏ. மைக்கல்சாமி தலைமைதாங்கினர். முதியோர் இல்லத்தலைவி அருட்செல்வி மரியகொறற்றி நன்றி கூறினர் பங்குத்தந்தை அருட்திரு சகாயம் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தினர். ஒன்றியத்தின் தலைவர் திரு தி. புஷ்பராசா, செயலாளர் திரு. ஜெராட் அன்சல் மோ. பொருளாளர் எஸ் ஏ ரவீந்திரன் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் ஒற்றுமையான ஒத்துழைப்பால் இந்த ஒன்றியம் வளர்ந்துவருவது குறிப்பிடத்தக்கது. (அ)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

(அரியாலை)

ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட சங்கத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் மத்தியஸ்தர்களுக்கான பரீட்சைக்கு யாழ். மாவட்டத்திலிருந்து நாற்பதுக்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் தோற்றவிருப்பதால் இப் பரீசையை யாழ்ப்பாணத்தில் நடாத்த ஏற்பாடுசெய்யும்படி கோரி ஸ்ரீலங்கா உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் திரு. எம். ரி. பெர்னண்டோவுக்கு யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (அ)

## யுனெஸ்கோ கழகம்

[யாழ்ப்பாணம்]

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கல்வி சமூக கலாச்சார ஸ்தாபனத்தின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் அமைவாக சர்வதேச நல்லுறவையும் கூட்டுறவையும் ஏற்படுத்தவும், ஊக்கப்படுத்தவும் சாவகச்சேரி தொகுதியில் 'யுனெஸ்கோ' கழகம் அங்குரார்ப்பணம் செய்யப்படவிருக்கிறது

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு, க. துரைராசா மேற்கொண்டு வருகின்றார்

அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை பிற்பகல் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சாவகச்சேரிதொகுதியில்உள்ள பொது இயக்கங்கள், தொண்டர் ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர். (மா

## இளைய சமுதாயத்தில் நற்பண்புகள் வளர ஆலயங்களின் பங்கு"

(மட்டுவில்)

''ஆத்மீகம், ஜீவகாருண்யம், அகிம்சை போன்ற பண்புகள் இன்றைய இளைஞர் சமுதாயத்தில் தளைத்தோங்கவேண்டிய அத்தியாவசிய அம்சங்கள். இதற்கு ஆலயங்கள், மதப் பிரமுகர்கள் முன்னின்று உழைக்கவேண்டும். ஆலய தரிசனங்கள், இறைவணக்கங்கள், புராண பாராயணங்கள், ஆத்மீக சிந்தனைகள்தான் எமது சமுதாயத்தில் அமைதி, பொறுமை, ஜீவகாருண்யம், அகிம்சை என்ற அம்சங்களை வளர்க்கவேண்டும்'''

இவ்வாறு சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் விளைவேலி தாளையம் பதி ஸ்ரீ துர்க்கை அம்பாள் ஆலயத்தில் ஆரம்பமான ஸ்ரீ கேதாரகௌரி விரதம் விழாவின்போது கூறினர். ஆலய அறங்காவலர் பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சாவகச்சேரி மாவட்ட சபை உறுப்பினர் திரு. செ. நவரத்தினம் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள், பிரம்மஸ்ரீ பரராஜசேகர சர்மாவும் நூற்றுக்கணக்கான விரதகாரப் பெண்களும் கலந்துகொண்டனர். திரு. நவரத்தினம் எம். பி. தொடர்ந்து தனது உரையில் கூறியதாவது:-

'சக்தியின்றிச் சிவமில்லை. சிவமின்றிச் சக்தியில்லை என்ற மனித வாழ்வின் அடிப்படைத் தத்துவ உண்மையை விளக்குவதாக அமைகிறது இந்த விரதம். இதுபெண்கள் மட்டுமே அனுஷ்டிக்கும் விரதமாக அமைந்தாலும், ஆண்களும் இத்தத்துவத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த உலகில் பிறந்த அனைவரும் வாழவேண்டும். வளமாக வாழவேண்டும் கல்வி, செல்வம், வீரம் ஆகிய அம்சங்களைப்பெற்று வளமாக வாழவேண்டும் என்று ஆசைப்படுவது அவர்கள் உரிமை. அனைவருக்கும் அப்படி வாழஉரிமை உண்டு. அவர்கள் நல்ல உழவு, தொழில்மூலம் தமது வளமான வாழ்வைப் பெருக்கிக் கொள்ளமுடியும். அதற்காக உழைக்கவேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமை என்றார்.

## வவனியா..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையங்கள், கமநல சேவை நிலையங்கள், இளைஞர் கழகங்கள், உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள், கிராமசேவை உத்தியோகத்தர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றும் பங்குபற்ற விரும்புவர்கள் இம்மாதம் 20ம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என்றும் வவனியா உதவி விவசாயப்பணிப்பாளர் திரு. எஸ். ரி. பத்மநாதன் இங்குள்ள சகல தொண்டர் தாபனங்களுக்கும் சுற்றறிக்கைமூலம் அறிவித்துள்ளார். (அ

## காந்திய வழியை நாம் கைக்கொள்ள வேண்டும்

(மட்டுவில்)

''அடக்குமுறைகளைத் துணையாகக்கொண்டு, பீரங்கி, சுழல் துப்பாக்கி, பயங்கரக் குண்டுகள், மக்களை விரட்டியடிக்கும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும் நம்பி ஆட்சி புரிந்த வெள்ளையனை அகிம்சை, அன்பு வழியாலான சத்தியாக்கிரகத்தின் மூலம் வெற்றிகண்டவர் காந்தியடிகளாகும். அன்பு வழியில், அகிம்சை வழியில் வல்லரசுகளையே அறப்போர்மூலம், கத்தியின்றி, இரத்தமின்றி வெற்றி காணமுடியும் என்பதை அவர் நிலைநாட்டினர்.

மீசாலையிலுள்ள தென்மராட்சி முத்தமிழ் மன்றத்தின் மகாத்மாகாந்தி நினைவு விழாவில் தலைமை உரை நிகழ்த்திய திரு. அ. பொ. செல்லையா இவ்வாறு கூறினர். இளைப்பாறிய அதிபர் திரு. ஆர் டி சுப்பிரமணியம், திரு. செ மாறன் உட்பட பலர் உரைநிகழ்த்தினர். திரு. செல்லையா தொடர்ந்து பேசுகையில்;

உலக உத்தமர் காந்தியடிகளைப்போன்ற ஒரு தலைவர் இலங்கையில் இருந்தால் அல்லது இருப்பாராஞல் நிட்சயம் இலங்கையில் இனவெறி, சாதி வெறி என்பன பூண்டோடு அழிந்துபோயிருக்கும் என்றார்.

தற்காலத்திலுள்ள பல தலைவர்களைப் போலல்லாது சொல், செயல் இரண்டிலும் ஒன்றி வளர்ந்தவர் காந்தியடிகள். ஏழைகள், தன்பம், துயர் உடையோர் மத்தியிலே காந்தியடிகளின் சேவை மிளிர்ந்தது வாந்தி பேதி, வெள்ளப்பெருக்குப் போன்ற இயற்கைக் கோளாறுகள் தலைதூக்கி மக்கள் துடிக்கும் பொழுதுஉல்லாசப்பவனிவரும் சில மக்கள் தலைவர்களைப் போலல்லாது துன்பப்படும் மக்களுக்கு, தன் இன்பங்களைத் துறந்து தன் வாழ்வையே தியாகம் செய்தவர் காந்தியண்ணல். இந்த வழிகளை எமது சந்ததியினரும் கடைப்பிடித்து வாழவேண்டும் என்றும் திரு. செல்லையா கேட்டுக்கொண்டார்.

## சென். பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

இளவாலை ஹென்ரியரசர் கல்லூரி யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரிகளுக்கிடையிலான உதைபந்தாட்ட மோதவில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அபாரமாக விளையாடி பெரு வெற்றிபெற்றது

முதலாவது பிரிவினருக்கான ஆட்டம் ஆரம்பமாகி பத்தாவது நிமிடம் ஹென்ரியரசர் கல்லூரியினர் முதலாவது கோலைப்போட்டு சென். பற்றிக்ஸ் அணியினரை திகைப்புக்குக்குள்ளாக்கினர். ஆனல் சம்பத்திரிசியார் கல்லூரி அணியினரின் வீரர்களான ஜெகசன், ஏ ஈ அன்ரனிப்பிள்ளை ஆகியோரின் விளையாட்டுக் காரணமாக சம்பத்திரிசியார் அணியினர் அடுத்தடுத்து 6 கோல்களை அடித்து 6—1 என்ற கோல்வீதத்தில் வெற்றி பெற்றனர்.

இரண்டாவது மூன்ருவது பிரிவினர்க்கான ஆட்டங்களும் விறுவிறுப்பாக இருந்தபோதிலும் 3—1, 2—1 கோல்களால் சம்பத்திரிசியார் அணியினர் வெற்றியீட்டினர்.

உதைபந்தாட்ட வீரர் ஏ. ஈ. அன்ரனிப்பிள்ளை 2வது, 1வது பிரிவினருக்கான ஆட்டங்கள் இரண்டிலும் விளையாடி சம்பத்திரிசியார் அணியை வெற்றிநடைபோட வைத்ததுடன் ரசிகர்களின் பாராட்டுதலையும் பெற்ருர்.

தோல்விகாணு வெற்றி வீரர்களான சென். பற்றிக்ஸ் அணியினருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர்க்குமான சாம்பியன் மோதல் நாளை மூன்ரும் திகதி சம்பத்திரிசியார் கல்லூரி மைதானத்தில் நடைபெற இருப்பதாக விளையாட்டுத்துறை பொறுப்பாசிரியர் அல்பேல்ட் சந்தியாப்பிள்ளை தெரிவித்தார்.

## சக்தி விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறச் சங்கத்தின் எட்டாவது கிளையின் சக்திவிழா கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. விழா ஒழுங்குகளை கிளை முகாமையாளர் ஐ. காசிநாதன். விற்பனையாளர், சி. சண்முகசுந்தரம் ஆகியோர் ஏற்பாடு செய்தனா.

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-காஞ்சனு
காதலிக்க நேரமில்லை
(புதிய பிரதி) (கலர்)

றீகல் [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
சில தினங்கள் மட்டும்
முரட்டுக்காளை
[கலர்]

சாந்தி [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
ஷா நவாஸ் - சுமதி
பாதை மாறிய பருவங்கள்
விரைவில்! எம். ஜி ஆர்.
நவரத்தினம் (கலர்)

ஹவுஸ் புல்!
ஹவுஸ் புல்!!
ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌன கீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)
டைரக்ஷன்: பாக்கியராஜ்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
லவகுசா
பாடசாலை மாணவர்க்கு
விசேட ஒழுங்குசெய்து
தரப்படும்

வெஸ்லி (மானிப்பாய்) தினசரி 6-15, 9-15, சனி ஞாயிறு 2-30
எம் ஜி. ஆர். - ஜெயலலிதா
ரகசியப் பொலிஸ் 115
(கலர் - புதிய பிரதி)

மனேகரா (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார்-ஜெய்கணேஷ்-லதா-சுபாஷினி
அழகே உன்னை ஆராதிக்கிறேன்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30.
கல்யாணகுமார் - முத்துராமன் - தேவிகா
நெஞ்சில் ஓர் ஆலயம்
[யாழ். நகரில் கடைசி முறையாகக் காண்பிக்கப்படுகிறது]
(புதிய பிரதி)

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ் நகர்)
சுதாதர் - சுமதி - சங்கிலி முருகன் நடித்த
சுவர் இல்லாத சித்திரங்கள்

WINDSOR (Jaffna) Daily 5 Shows
'RISE AND FALL OF IDI AMIN'
Murder, Rape and Torture — More than 500,000 people brutally murdered during IDI AMIN'S Rule———
கொழும்பில் 100 நாட்களுக்கு மேல் காட்சியளித்த வெற்றிச் சித்திரம்——
உகண்டா ஜனுதிபதி இடி அமினின் எழுச்சியும் வீழ்ச்சியும்--

# 'மைத்திரி' குழுவினரை சேர்க்க

# சுதந்திரா முடிவு

(நமது சிறப்பு நிருபர்)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து பிரிந்துசென்ற 'மைத்திரி' குழுவினரை எவ்விதநிபந்தனையுமின்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் சேர்த்துக்கொள்வதென்று முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில்நடைபெற்றது.

இக்கூட்டத்தில்; பாராளுமன்றபதவிக்காலத்தைநீடித்துவைக்கும் அரசாங்கத்தின் திட்டம் குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டதுடன், 'மைத்திரி' குழுவினரை மீண்டும்சேர்த்துக்கொள்வது, திரு. அநுரா பண்டாரநாயக்கா அண்மையில் வெளியிட்ட அறிக்கை பற்றியும் ஆலோசிக்கப்பட்டது.

'மைத்திரி' குழுவினரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சேர்த்துக்கொள்வதென்று முடிவுசெய்யப்பட்ட போதிலும், அவர்கள் மனுச்செய்தே கட்சியில் சேர முடியும்என்றும் சாதாரண உறுப்பினர்களாகவே இவர்கள் கணிக்கப்படுவார்கள் என்றும், உடனடியாக எவ்வித பதவியும் வழங்கப்படமாட்டாது என்றும் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

கட்சி சார்பில் அறிக்கைகளை கட்சித் தலைவி அல்லது பொதுச் செயலாளர் மட்டுமே வெளியிட முடியும் என்றும் இக்கூட்டத்தில்முடிவுசெய்யப்பட்டது.

பாராளுமன்றப் பதவிக் காலத்தை நீடிப்பது குறித்து கடுமையான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டு, சகல எதிர்க்கட்சிகளையும் அழைத்து, ஆலோசனைபெற்று அரசுக்கு எதிராக பொது அமைப்பு ஒன்றை உருவாக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

## "பாராளுமன்ற பதவிக்காலம் நீடிப்பு: தீர்மானிக்கும் உரிமை மக்களுக்கே உள்ளது!"

### —லலித் அத்துலத்முதலி

(கொழும்பு)

மக்கள் தமது ஜனநாயக உரிமைகளைப்பாவித்து சர்வஜன வாக்கெடுப்பில் கலந்து கொண்டு பாராளுமன்றத்தின் ஆயுட்காலத்தை ஆறு ஆண்டுகளுக்கு நீடிப்பது தொடர்பாக அபிப்பிராயத்தை தெரிவிக்க வேண்டும்''.

இவ்வாறு வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி இரத்மலானையில் சிறுவர்களுக்கான பால் விநியோக நிலையத்தை திறந்து வைத்து உரையாற்றுகையில் கூறினார். இவர் அங்கு தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:—

''பாராளுமன்றத்தின்ஆயுட் காலத்தை மேலும்ஆறுஆண்டுகளுக்கு நீடிப்பதா, இல்லையா என்பதை தீர்மானிக்கும் உரிமை மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

''சர்வஜன வாக்கெடுப்பை எதிர்ப்பவர்கள் மக்களின் ஜனநாயக உரிமைகளை எதிர்ப்பவர்களாவர். சர்வஜன வாக்கெடுப்பு சம்பந்தமாகஉயர்நீதி மன்றத்தின் ஆலோசனைக்கமைய அரசியலமைப்பில் திருத்தம்கொண்டுவரப்படும்'' என்றார். (வெ)

## இன்று விசாரணை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உதயணன் ஆகியோருக்கு எதிரான வழக்கும் மேற்படி நீதிமன்றத்தில் இன்று விசாரணை செய்யப்படவுள்ளன.

பொலிஸ் கான்ஸ்டபிள் ஞானசம்பந்தனை சுட்டுக் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்ட குட்டிமணி, ஜெகன், ஸ்ரீகுமார் ஆகியோருக்கு எதிரான வழக்கும், 1981ம் ஆண்டு இடம்பெற்ற நீர்வேலிவங்கிக்கொள்ளைவழக்கும் இன்று விசாரணை செய்யப்படவுள்ளன.

இவ்வழக்குகளில்எதிரிகளின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி எம். சிவசிதம்பரம் சட்டத்தரணிகள் மாணிக்கவாசகம் அண்டலூரீட், எஸ். நவரத்தினம் (கரிகாலன்), எம், ஆலாலசுந்தரம், கனகி. மனோகரன், ஆர் டி. இரத்தினசிங்கம், கே எஸ். இரத்தினவேலு கே, வி. தவராஜா. டி. ராஜசிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜராவார்.

## இளவரசர் பிலிப் ஜப்பான் விஜயம்

டோக்கியோ, நவ 1

பிரிட்டிஷ் இளவரசர் பிலிப் ஜப்பானிற்கு விஜயம் செய்துள்ளார் இவர் அங்கு ஜப்பானிய பிரதம மந்திரி திரு சுசூக்கியைச் சந்தித்து சர்வதேச வனவிலங்கு ஸ்தாபனத்திற்கு கூடுதலான நிதி உதவி வழங்குமாறு கேட்டுள்ளார்.

இளவரசர் பிலிப் சர்வதேச வனவிலங்கு ஸ்தாபனத்தி தலைவராவார். (வெ)

## தீ விபத்து...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிடுகுகளும் கம்புகளும் எரிந்து சாம்பராயின. ஆனாலும் இவ் விபத்தினால் கோபுரம் சிறிதும் சேதமடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கோபுரக் கட்டடத்தில் எரிந்து கொண்டிருந்த மின் விளக்கு வெடித்ததினால் இத் தீ விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கட்பட்டது.

## மரண அறிவித்தல்

### கனகசபை தம்பாபிள்ளை

இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தாவடி வாசியுமாகிய கனகசபை தம்பாபிள்ளை காலமானார். (உரிமையாளர் மங் எ பேணிச்சரி பலஸ், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.)

இவர் மகேந்திரராணியின் அன்புக்கணவரும், கெங்காதரன், கெங்காதேவி, ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன், கருணாகரன், பிரபாகரன், பிரபாலினி ஆகியோரின் அன்புத்தகப்பனாரும் ஆவார். அன்னாரது ஈமக் கிரியைகள் இன்று 2-11-82 பிற்பகல் 3 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்

கொழும்பு றெஸ்ரோறன்ற்

யாழ்ப்பாணம்.

பாடசாலை ஒழுங்கை,

தாவடி.

5016

## 6 மாணவர்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

வர் அவை [கேட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

'றாக்கிங்'கில் ஈடுபட்டதாகக் கருதப்பட்டு இடைநிறுத்தம் செய்யப்பட்ட ஆறு மாணவர்களுக்கும் மன்னிப்பு வழங்கி, அவர்களை மீண்டும் விரிவுரைகளில் கலந்து கொள்ள அனுமதிக்கவேண்டுமென்று பல்கலைக்கழகநிர்வாகத்தை மாணவர் அவை கேட்டுள்ளது. (வெ

## ஹெக்டர்---

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

### ஒருவர் கைது

போலி அரிசிக்கூப்பன்கள் வெளியிடப்பட்டது தொடர்பாக விசாரணைசெய்துவரும் பொலிசார் நேற்று ஓ. வி அபயகுணசேகர என்பவரைக் கைது செய்தனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி இளைஞர் பேரவை அமைப்பாளர் என்று கருதப்படும் இவர், நேற்று கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு இன்று வரை றிமாண்டில் வைக்கப்பட்டார். (இ

## இப்படியும் நடக்கிறது

ரயிலில் பிரயாணம் செய்யும்போது பொதுவாக, டிக்கட் பரிசோதகர்கள் ரயில் டிக்கட்டுகளைக் கேட்டுவாங்கி, அதனை ரத்துச்செய்து நமக்குத்திருப்பிக் கொடுப்பார்கள்.

ஆனால் இப்பொழுது, புகையிரதப் பாதுகாவலர்களும் டிக்கட் பரிசோதனை செய்கின்றனர்.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் ஒரு குடும்பம் ரயிலில் பயணம் செய்தது. குடும்பத்தலைவன் எல்லோருடைய டிக்கட்டுகளையும் பாதுகாப்புக்கருதி தமது வசம் வைத்திருந்தார்.

ரயிலில் டிக்கட்டுகளை சோதனைசெய்துவந்த புகையிரத பாதுகாவலர் குடும்பத்தலைவரிடம் டிக்கட் கேட்டார். அவர் எல்லா டிக்கட்டுகளையும் கொடுத்தார்.

''நோ... எல்லா டிக்கட்டுகளும் உம்மிடம் இருக்கக் கூடாது'' என்று தெரிவித்த அவர்; அங்கு சுற்றியிருந்த அவரது குடும்ப அங்கத்தவர்களிடம் (சின்னஞ்சிறிசுகள்) ஒவ்வொன்றாகப் பிரித்துக்கொடுத்துவிட்டார்!

ஃ ஃ ஃ

''இந்தோனேஷியாவில், மரவள்ளிக் கிழங்கிலிருந்து சீனி தயாரிக்கும் திட்டம் வெற்றிஅளித்துள்ளது''

— செய்தி

''இலங்கையில் மரவள்ளிச் கிழங்கிலிருந்து (நறுக்கப்பட்ட கிழங்குத்துண்டுகளிலிருந்து உயர்ரக மதுரசம் தயாரிக்கத் திட்டம் வகுக்கப்படுகிறது.'' — செய்தி

'ஊ ருவி

## சீனாவில் தேர்கள் கண்டுபிடிப்பு

பீக்கிங், நவ. 1

சீனாவில் 2, 200 ஆண்டுகள் தொன்மைவாய்ந்த 23 தேர்களையும், 24 குதிரை உருவங்களையும் தொல் பொருள் திணைக்களம் கண்டுபிடித்துள்ளது.

தேர்களில் குதிரைகள் பூட்டப்பட்ட நுகக்கால் ளும் பொருத்தப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

களிமண்ணால் செய்யப்பட்ட குதிரைகளின் உயரம் ஒரு மீற்றராகும். (வெ)

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

(கொழும்பு)

பாராளுமன்றம் இன்று பிற்பகல் 3 மணிக்குக்கூடும்போது அடுத்த ஆண்டுக்கான கணக்கு வாக்குப்பதிவு விபரங்களை நிதி அமைச்சர் திரு ரொனிடிமெல் சபையில் சமர்ப்பிப்பார்.

உள்ளூர்திறைசேரி உண்டியலுக்கான பிரேரணையொன்றையும் இவர் சபையில் இன்று சமர்ப்பிக்கவுள்ளார்.

இவற்றை விவாதிப்பதற்காக பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் இடை நிறுத்திவைக்கப்படவுள்ளன. (வெ)

## கூட்டுக்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் கலந்து கொண்டுள்ளனர்.

இப்பேச்சு வார்த்தையின் இறுதியில் கூட்டுக்கமிஷன் ஒன்றை அமைக்க இருநாடுகளும் இணக்கம் தெரிவித்துள்ளன.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல்ஹக்தனது இந்திய விஜயத்தை முடித்துக் கொண்டு இன்று இந்தோனேஷியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளுக்கான விஜயத்தை ஆரம்பித்தார். (வெ)

## நாடுகடத்தும் சட்டம்

மனிலா, நவ. 1

பிலிப்பைன்ஸ்சில் தேசவிரோத நடவடிக்கைகளிலீடுபடும் வெளிநாட்டவர்களை நாடுகடத்துவதற்கான சட்டமொன்றை அந்நாட்டின் அரசாங்கம் கொண்டுவரவுள்ளது.

பிலிப்பைன்ஸ்ஸில் 5000 சமயப்பிரசாரகர்கள் இருப்பதாகவும், இவர்களில் சிலர் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வெ)

## இலவச பாடப்புத்தக விநியோகம்

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான இலவச பாடப்புத்தக விநியோகம் இன்று ஆரம்பமாகவுள்ளது. முதலாம் தரத்திலிருந்து பத்தாம் தரம்வரையிலான 35லட்சம் மாணவர்களுக்கு இப்புத்தகங்கள் விநியோகிக்கப்படும்.

இலவச பாடப்புத்தக விநியோகத்திற்கு 7 கோடி ரூபா செலவாகும் இவற்றுடன் 'யுனிசெப்' நிறுவனத்தின் துணை நூல்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளது. [வெ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு நவம்பர் மாதம் 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under numbre பு.இ. 10023o/81. Eelanaadu - P. O. Box, 49. Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126.